இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2024. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 148 | இதழ் : 02 | திகதி : 04.02.2024 | விலை : 50.00

# யாழ் பல்கலைக்கழகத்தின் பொன் விழா ஆண்டில்

## கிறிஸ்தவக் கற்கைகளின் இரண்டாவது அனைத்துலக ஆய்வு மாநாடு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ கற்கைகளின் இரண்டாவது சர்வதேச ஆய்வு மாநாடு யாழ் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புக்கள் பீடம் மற்றும் பொதுவெளி இறையியலுக்கான ஆசிய வலைப்பின்னல் ஆகியவற்றின் இணைந்த பங்களிப் புடன் யாழ் பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டின் நிகழ்வுகளில் ஒன்றாக கடந்த பெப்ரவரி 01, 02ம் திகதிகளில் நடைபெற்றது.

இம்மாநாடு கிறிஸ்தவ நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் அருட்பணி போல் றொகான் அடிகளாரின் தலைமையிலும் ஒழுங்குபடுத்தலிலும் சிறப்பாக நடைபெற்றது.

இம்மாநாட்டின் ஆரம்ப நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் கலந்து உரையாற்றினார். ஆயர் அவர்கள் தம் உரையில் *"இன்றைய உலகில் சமயங்கள் பல சவால்களை எதிர்நோக்குகின்றன. சமயத்தின்பேரால் பல விரிசல்களும், போர்களும் இன்று நடந்தேறுகின்றன. இளையோர் தொழில்நுட்பக் கவர்ச்சியினால் இறை விசுவாசத்தை இழந்து வருகின்றனர். இந் நிலையில் மதங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இவ்வாறான மாநாடுகள் காலத்திற்குத் தேவையானவை. பல்கலைக்கழகங்கள், பட்டதாரிகளை உருவாக்குவதுடன் நின்று விடாது ஆய்வுகளை ஊக்கப்படுத்திக் கட்டுரைகளை வெளியிடுவதன் வழியாகவே அறிவியல் சார் சமூகத்தைக் கட்டியெழுப்பமுடியும்"* எனக் குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா அவர்களும், மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னான்டோ ஆண்டகை அவர்களும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அருட்பணி ஞானபற்றிக் அடிகளும் கலந்து கொண்டனர். முதல் நாள் சிறப்புரையை முன்னாள் கிறிஸ்தவ நாகரிகத்துறைத் தலைவரும் தற்போதைய ரொரண்டோ பல்கலைக்கழகக் பேராசிரியருமாகிய அருட்பணி A.J.V. சந்திரகாந்தன் அடிகளார் 'பொதுவெளியில் சமயங்களும் இறையியலும்' எனும் தலைப்பில் தம் உரையை வழங்கினார். இவ் ஆய்வு மாநாடானது துறைசார் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்களின் பூரண பங்களிப்புடன் நடந்தேறியது. இம் மாநாட்டில் 77 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் தேசிய அன்பிய ஆணைக்குழு ஒன்றுகூடல்



தேசிய அன்பிய ஆணைக்குழு அங்கத்தவர்களுக்கான காலாண்டு ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த 24ஆம் 25ஆம் திகதிகளில் யாழ். மறைமாவட்டத்தில் நடைபெற்றது.

யாழ். மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை ஜோய் மரியரட்ணம் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் தேசிய அன்பிய ஆணைக்குழுவுக்குப் பொறுப்பான திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை நோயல் இம்மானுவேல் பெர்னான்டோ ஆண்டகை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அனைத்து மறைமாவட்ட அன்பிய இயக்குநர்கள் மறைமாவட்டப் பிரதிநிதிகள் யாழ். மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

பண்டத்தரிப்புப் பற்றிமா அன்னை தியான இல்லத்தில் கொடியேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் அரங்க நிகழ்வுகள், பங்குத் தரிசிப்பு, வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடங்களை பார்வையிடுதல் போன்றன இடம்பெற்றன.

பங்குத் தரிசிப்பு நிகழ்வில் தேசிய அன்பிய ஆணைக்குழு உறுப்பினர்கள் மல்வம் திருக்குடும்ப ஆலயத்திற்கு கள அனுபவப் பயணம் மேற்கொண்டு அங்கு பங்குத்தந்தை அருட்தந்தை S.A.அருட்செல்வன் அடிகளின் வழிகாட்டலில் பேரருட்தந்தை நோயல் இம்மானுவேல் பெர்னான்டோ அவர்களுடன் இணைந்து அன்பியப் பங்கு ஊக்குவிப் பாளர்களை சந்தித்து அவர்களுடன் இறைவார்த்தை பகிர்வை மேற் கொண்டனர்.

தொடர்ந்து 25ஆம் திகதி பண்டத்தரிப்புத் தியான இல்லத்தில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, தேசிய அன்பிய ஆணைக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மறைமாவட்ட அன்பிய செயற் பாட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையா டப்பட்டன.

## இலங்கைத் தமிழ்த் திருஅவைக்கு அமைவாகத் திருப்பலி நூல்



இலங்கைத் தமிழ்த் திரு அவையில் தற்போது பயன்பாட் டிலுள்ள இந்தியா நாட்டில் அச்சி டப்பட்ட திருப்பலி நூலை இலங்கை தமிழ்த் திரு அவைக்கு ஏற்றதாக மாற்றும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பான கலந்துரையாடல் வத்திக்கான் திரு அவைத் தலைமைப்பீட வேண்டு கோளுக்கு அமைவாக இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் ஒழுங்குபடுத்தலில் மன்னார் மடுத் திருத்தலத்தில் கடந்த 24ஆம் திகதி நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை இம்மானுவேல் பெர்னான்டோ ஆண்டகை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசிய வழிபாட்டு ஆணைக்குழு இயக்குநர் அருட் தந்தை இந்திரஜித், யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை கிறிஸ்துநாயகம், மட்டக்களப்பு மறைமாவட்ட அருட்தந்தை அன்ரனி ஜெயராஜ், திருகோணமலை மறைமாவட்ட அருட்தந்தை கிங்சிலி றொபேட் , நற்கருணைநாதர் சபையின் மாகாண முதல்வர் அருட்தந்தை சௌகான், ஆசீர் வாதப்பர் சபையைச் சேர்ந்த முன்னாள் தேசிய வழிபாட்டு ஆணைக்குழு இயக்குநர் அருட் தந்தை சூசைநாதன் மற்றும் யாழ். மாகாண அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தை சுரேந் திரராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## யாழ். பல்கலையில் "செம்பாத்தாள்" கூத்துருவ நாடகம்



யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அனைத்துலக ஆய்வு மாநாட்டின் கலை நிகழ்வாக யாழ். திருமறைக் கலாமன்றத்தி னரால் "செம்பாத்தாள்" எனும் கூத்துருவ நாடகம் அரங்கேற்றப்பட்டது.

பலரது பாராட்டையும் பெற்றிருந்த இவ் ஆற்றுகையை திருமறைக் கலாமன்றப் பிரதி இயக்குநர் திரு.யோண்சன் ராஜ்குமார் அவர்கள் எழுதி நெறியாள்கை செய்திருந்தார்.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

# எமது எண்ணம்

## எம் துயர் துடைப்பார் உண்டோ? காசா உதாரணம்

காசாவில் நடந்து கொண்டிருக்கும் போரில் இழைக்கப்படும் குற்றங்களை இன அழிப்பைத் தடுப்பதற்கான உலகளாவிய நீதிச் சட்டகத்தின் ஊடாக சர்வதேச நீதிமன்றம் கையாளவேண்டும் என்றும் இன அழிப்பில் இஸ்ரேல் ஈடுபட்டிருப்பது விசாரிக்கப்படவேண்டியது என்றும் தென்னாபிரிக்கா முன்வைத்த வழக்கின் நியாயாதிக்கம் நம்பத்தகுந்ததாக இருப்பதாகவும் நீதிமன்றம் கருதி, அதன் அடிப்படையில் இடைக்காலத் தடையுத்தரவுகளையும் பிறப்பித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வழங்கிய இடைக்காலத் தீர்ப்பு ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு என்று சட்ட அறிஞர்களும், மனிதாபிமான சமூகத்தினரும் வரவேற்றுள்ளனர். இஸ்ரேல் தான் செய்வது இன அழிப்பு அல்ல என்று மறுத்துரைத்துள்ளது. பலஸ்தீனத்தில் உடனடி யுத்தநிறுத்தத்தைக் கொண்டுவருமாறு பணிக்கும் ஐ.நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானங்களை மூன்று முறை தனது வீட்டோவைப் பயன்படுத்தித் தடுத்த அமெரிக்காவுக்கு மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத திண்டாட்டத்தை நீதிபதிகள் வழங்கியுள்ளனர்.

1948 ஆம் ஆண்டு உலக நாடுகள் ஏற்றுக் கொண்ட இனஅழிப்புக் குற்றத்துக்கு எதிரான சர்வதேச ஒப்பந்தத்துக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற ஐந்து விதமான குற்றங்களை காசாவில் இஸ்ரேலின் படைகள் செய்யாது பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு இஸ்ரேல் அரசுக்குரியது என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக இவ்வாறான குற்றங்கள் எதனையும் இஸ்ரேலின் படைகள் செய்யாது பார்த்துக்கொள்வதற்கு இஸ்ரேல் அரசு கடமைப்பட்டுள்ளது என்றும், இதற்காக இஸ்ரேல் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் அர்த்தமுள்ள வகையில் நடைமுறைப்படுத்தப்படுவதை ஆதாரங்களுடன் ஒரு மாதத்திற்குள் தனது நீதிமன்றின் முன் அறிக்கையிட வேண்டும் என்றும் மட்டுமல்ல குற்றங்கள் தொடர்பான தடயங்கள் எவற்றையும் அழிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடாது என்றும் சர்வதேச நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தீர்ப்பில் இஸ்ரேலுக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

எனினும் தென்னாபிரிக்கா கோரிய இடைக்காலத் தடை நடவடிக்கையாக உடனடிப் போர் நிறுத்தத்திற்கு நீதிமன்றம் உத்தரவிடவில்லை. அவ்வாறான உத்தரவைப் பிறப்பிப்பதற்கான பொருத்தமான இடம் ஐ. நா. பாதுகாப்புச்சபை என்று நீதிபதிகள் கருதியிருப்பதாகவும், சட்டரீதியான விடயத்தை மட்டுமே அவர்கள் கையாண்டிருப்பதாகவும் அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

எது எவ்வாறிருப்பினும், இஸ்ரேல் தனது வழக்காடலில் இன அழிப்புச் சட்டகத்துக்குள் காசா விடயம் அணுகப்படக்கூடாது என்று முன்வைத்த வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாமல், நம்பகமான குற்றச்சாட்டாக தென்னாபிரிக்கா முன்வைத்துள்ள வழக்கை இன அழிப்பு என்ற கண்ணோட்டத்தில் அணுக முடிவெடுத்தமையே இஸ்ரேலுக்கு விடுக்கப்பட்டுள்ள பெரிய எச்சரிக்கை என்று சர்வதேச சட்டவல்லுநர்களும் அரசியல் அவதானிகளும் கருதுகின்றனர்.

அதேவேளை, இஸ்ரேலுக்கு தொடர்ந்து உதவும் நாடுகளுக்கும் எச்சரிக்கையாக இது அமைந்துள்ளது. 1948 இன அழிப்புச் சட்டகத்தின் படி இன அழிப்பு செய்வது மட்டுமல்ல அதற்கு உடந்தையாக இருப்பதும் அதற்கு நிகரான சர்வதேசக் குற்றமாகும்.

இத்தருணத்தில் வெளியாகியுள்ள உலக நீதிமன்றத்தின் இடைக்காலத் தடையுத்தரவும் இன அழிப்புச் சட்டகத்தின் ஊடாக தொடர்ந்தும் இஸ்ரேல் விசாரணைக்கு உள்ளாக இருப்பதும் பல தாக்கங்களை எழுப்பப் போகின்றன. உடந்தைக் குற்றம் தொடர்பாகவும் தனிவேறான வழக்குகள் சர்வதேச நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் வாய்ப்பும் அதிகரித்துள்ளது.

பதினேழு நீதிபதிகளில் பதினைந்து நீதிபதிகள் தீர்ப்பில் வழங்கப்பட்ட பல விடயங்களில் ஒருமித்த குரலில் செயற்பட்டிருக்கின்றனர். இந்தப் பதினேழு பேரில் இஸ்ரேல் நியமித்த ஒரு நீதிபதி அடங்கலாக மேற்கு நாடுகள் நியமித்த நீதிபதிகளும் உள்ளடங்குகின்றனர். இந்த இடைக்காலத் தீர்ப்புக்குத் தலைமை தாங்கிய நீதிபதி ஒரு அமெரிக்கர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காசாவில் நடப்பது இன அழிப்பு என குற்றம் சுமத்திக் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி தென்னாபிரிக்க அரசு தாக்கல் செய்த மனு மீதான முதற்கட்ட விசாரணை இந்த ஜனவரி மாதம் பதினொராம் பன்னிரெண்டாம் திகதிகளில் நெதர்லாந்து நாட்டில் ஹேக் நகரில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது.

இந்த விசாரணை பற்றிய இடைக்காலத் தீர்ப்பு சென்ற 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியாகியுள்ளது. இடைக்காலத் தீர்ப்பில் உடனடி போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிடவில்லை. ஆனாலும் ஒரு மாதத்திற்குள் காசாவில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் உயிரிழப்புகள், அழிவுகளைத் தவிர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை ஆதாரபூர்வமாகச் சமர்ப்பிக்க வேண்டும் என நீதிமன்றம் இஸ்ரேல் அரசுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. மனிதாபிமான உதவிகள் உடனடியாகத் தங்குதடையின்றி வழங்கப்பட வேண்டும் எனவும் தீர்ப்பில் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

ஒரு மாதத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்குமானால் இஸ்ரேல் அரசுக்கு மேலும் ஆபத்துக்கள் நேரலாம் என்ற எச்சரிக்கைத் தொனி சர்வதேச நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இத் தீர்ப்பை ஏற்க முடியாதெனவும் தாங்கள் இனஅழிப்புச் செய்யவில்லை என்று கூறிய அதேவேளை சர்வதேசச் சட்டத்துக்குத் தாங்கள் மதிப்பளிப்பதாகவும் இஸ்ரேல் பிரதமர் நெத்தன்யாகு கூறியநிலை இஸ்ரேல் எதிர்கொள்ளும் இரட்டை நிலையை வெளிப்படுத்தியுள்ளது. தாங்கள் இன அழிப்புச் செய்யவில்லை என்றும் காமாஸ் என்ற பயங்கரவாதக் குழுவே இனஅழிப்புச் செய்வதாகவும் அவர் வியாக்கியானம் செய்துள்ளார்.

உயிரிழப்புகள் காசாவில் நாளுக்கு நாள் அதிகரித்து போரும் தொடருமானால், உடனடியாகப் போர் நிறுத்தத்தைக் கோரி ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் தீர்மானம் முன்னெடுக்கப்படவேண்டிய சூழல் ஏற்படும். இஸ்ரேல் மீது தென்னாபிரிக்கா தொடர்ந்துள்ள இன அழிப்புத் தொடர்பான வழக்கு உலக நீதிமன்றத்தில் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

காசாவில் நடைபெற்றுக் கொண்டிருப்பதைப் போல 2009 இல் ஈழத் தமிழர் மீது இலங்கை அரசு நடத்திய போர் இன அழிப்புக்கானது. ஆகவே இஸ்ரேலுக்கு எதிராக வழக்குத் தொடுத்தது போன்று சர்வதேச நீதிமன்றத்திடம் முன்னெடுக்க ஏதேனும் ஒரு நாடு முன்வரவேண்டும்.

**அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்**

## உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமா பயிற்சி நெறி - 2024 - 2025

கொழும்பு Teritiary and Vocational Education Commission இன் அங்கீகாரம் பெற்ற அகவொளி உள ஆற்றுப்படுத்தல் நிறுவனம் நடாத்தும் "உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமா" (Diploma in Psychological) கற்கை நெறிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை :-** அதிகுறைந்த தகைமையாக க.பொ.த (உயர்தரம்) சித்தி

**இலக்குக் குழுவினர் :-** பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், குருக்கள், துறவியர்கள், தாதியர்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றுவோர் மற்றும் உள ஆற்றுப்படுத்தல் சேவையில் ஆர்வமுள்ளோர்.

**கற்கை நெறியின் தனித்துவங்கள் :-** உளவியல் துறையில் தகைமை (M.Sc., M.Phil., B.A) வாய்ந்த வளவாளர் குழாமினால் நெறிப்படுத்தப்படுகின்ற இக் கற்கை நெறியானது செயல்முறைப் பயிற்சிகளையும் உள ஆற்றுப்படுத்தல் சார்ந்த ஆய்வினையும் கொண்டுள்ளது. இதனை நிறைவு செய்தோர் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் உள ஆற்றுப்படுத்துநர்களாகப் (Counsellors) பணியாற்றி வருகின்றனர்.

**கற்கை நெறியின் மொழி :-** தமிழ்

**காலம் :-** ஒரு வருடம்

**நாட்கள் :-** வார இறுதி நாட்கள் (சனி, ஞாயிறு)

**நேரம் :-** 9.00 முற்பகல் தொடக்கம் 2.15 பிற்பகல் வரை

**விண்ணப்ப முடிவுத் திகதி :-** பெப்ரவரி 10 - 2024

**கட்டணம் :-** அறுபது ஆயிரம் (60,000) முழுக் கற்கை நெறிக்கட்டணம்

**பதிவுக்கட்டணம் :-** ரூபா 1000

**கற்கை நெறி ஆரம்பம்:-** மார்ச் 02 - 2024

**விண்ணப்பப் படிவம் :-** விண்ணப்பப்படிவங்களைக் காலை 9.00 முற்பகல் முதல் மாலை 4.00 மணி வரை அகவொளி உள ஆற்றுப்படுத்தல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**மேலதிக விபரங்களுக்கு :-**

கற்கை நெறி ஒருங்கிணைப்பாளர் :- 0779047651

பணியகம் :- 021 222 2856 - இயக்குநர் :- 076 7366655

அருட்பணி எம்.டேவிட்
இயக்குநர்

## 31ம் நாள் நினைவு



அன்னையின் மடியில்: 04 . 04 . 1951

இறைவன் கரத்தில்: 03 . 01 . 2024

அமரர்

### யோசப் ஜெயராஜன் (ராஜன்)

(ஓய்வு பெற்ற புனித வளன் கத்தோலிக்க அச்சக ஒப்புநோக்குனர்)

"நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக நான் உமக்குச் சொல்கிறேன்"
லூக் 23:43

சடுதியாய் அழைத்தார் இறைவன்
விடை பெறுவது தெரியாமல் உடன் சென்றீர்
இறைவன் எண்ணம் என்னவோ
உமைக் கூட்டிச் சென்றார் விண்ணக வாழ்விற்கு.

மாட்டின் வீதி
யாழ்ப்பாணம்.

AD-10

நீங்காத நினைவுடன் இவரது அன்பில் நிலைத்திருக்கும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
அன்னாரது சகோதரர்கள், சகோதரிகள், உறவினர்கள்
மற்றும் நண்பர்கள்

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 07 . 03 . 1942

இறப்பு: 08 . 02 . 2014





அமரர்

### யோசேப் யோண்சிங்கம்

எம்மை விட்டுப் பிரிந்து
பத்து ஆண்டுகள் மறைந்தாலும்
பாசமும் பணியும் மறையவில்லை
அழியாத் தடங்களைப் பதித்துவிட்டு
ஆண்டவர் அடிதனை அணைத்துக் கொண்டீர்

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை

உங்களது ஆன்மா சாந்தியடைய
வேண்டி நிற்கும்
சகோதரிகளின் குடும்பத்தினர்

AD-12

# போர்களும் வன்செயல்களும்



- ஓர் உளவள நோக்கு

**பின்புலத்தில்...?**

1960 களில் வியட்நாமில் ஒரு பாரிய நீண்ட போர் நடைபெற்றது. இப்போர் எங்கிருந்தோ வியட்நாம் சென்ற அமெரிக்கர்களுக்கும் அருகே இருந்த சீனாவுக்கும் வியட்நாமில் போர் நடைபெற்றது. இதேவேளை ரஷ்யாவிற்கும் வடஅமெரிக்காவுக்குமிடையே ஒரு பனிப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதேவேளை, வடஅமெரிக்கக் கறுப்பின மக்கள் மனித உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் பின்னணியில், தோமஸ் மேர்ட்டன், ஓர் ஆழ்மௌனத் துறவி, இப் போராட்டங்களை உன்னிப்பாகப் பார்த்தார். ஒரு கட்டுரை வரைந்தார். பின்னர் அவர் மிகவும் பிரசித்தி பெற்ற நூலொன்றை எழுதினார்- The New Seevs of Contemplation. இந்நூலில் இரண்டு கட்டுரைகள் போர்களின் பின்புலத்தில் எழுதப்பட்டவை.

**பயம்**

தோமஸ் மேர்ட்டனின் கூற்றின்படி போர்களின் பின்புலத்தில் இருப்பது பயம். யாருக்குப் பயம்? ஒருவரொருவருக்குப் பயப்படுவது மட்டுமல்ல, அதற்கும் மேலாக அனைத்திற்கும் பயப்படுகின்றோம். ஒருவர் ஒருவரை நம்பாமை மட்டுமல்ல, எங்களையே நாங்கள் நம்பவில்லை. மற்றவர்களை வெறுப்பது மட்டுமல்ல, எம்மையே நாம் வெறுக்கின்றோம். இந்த வெறுப்பு ஆழமாக எங்களில் உள்ளது. இந்த ஆழமாக உள்ள வெறுப்பு சக்தி வாய்ந்தது. என்னுள் உள்ள தீமை - கொடிய மிருகம் - மற்றவர்களைத் தீமைக் கண்களுடன் பார்க்கின்றது. என்னுள் உள்ள கொடிய குணம் விழித்தெழுந்து பாய்கின்றது. விளைவு,வன்செயல், போர்.

என்னை நான் வெறுக்கும் பொழுது, என்னை நானே நம்பாத பொழுது, என்னுள் ஓர் அக்கறை - என்னுள் நித்தமும் என்னையே உறுத்தும். ஒரே வகையான சிந்தனை என்னை ஆட்கொள்ளும் Iam preoccupied. இருண்டவன் கண்ணுக்கு மருண்டதெல்லாம் பேய் நித்தமும் என்னை உறுத்துவதென்ன? யார் என்னைத் தாக்குவார்கள்? எப்படித் தாக்குவார்கள்? யாரிடம் அவர்கள் உதவி பெறுவார்கள்? ஆயுதங்களை எங்கிருந்து கொள்வனவு செய்வார்கள். எப்படிப்பட்ட ஆயுதங்களைக் கொள்வனவு செய்வார்கள்? ஆயுத உதவி மட்டும்தானா? இல்லை, ஆயுதத்தோடு பயிற்று விக்கப்பட்ட ஓர் இராணுவமும் வந்து சேருமா? எந் நேரமும் இப்படிப்பட்ட சிந்தனையில் குழம்புவார்கள். இன்று இஸ்ராயேல் இப்படிப்பட்ட ஒரு மனநிலையில் இருப்பதைப் பார்க்க முடிகிறது. இப்படிப்பட்ட சிந்தனை யுடையோர் "பைத்தியங்களாக" மாறுவார்கள். இந்தப் பைத்தியந்தான் வன் செயல்களாகவும் போர்களாகவும் பாய்கின்றது. இந்தப் பாய்ச்சல் எதையாவது, யாரை யாவது அழிக்கத் துடிக்கின்றது.

துரதிஷ்டவசமாக, இந்த யார் யார் என் பதை இந்தப் "பைத்தியங்களே" முடிவு செய்து விடு கின்றன. இஸ்ராயேலுக்குப் பலஸ்தீனியர், பௌத்த சிங்களவர்களுக்குத் தமிழர்களும் இஸ்லாமியரும், இந்துவத்துக்குக் கிறிஸ்தவர்களும் இஸ்லாமியரும், ரஷ்யாவிற்கு NATO நாடுகள் - அதில் முதல் பலிக் கடாவானது உக்ரைன். இவ்வாறு, யார் யாரை அழிக்க வேண்டுமென்று முன்கூட்டியே இந்தப் "பைத்தியங் கள்" முடிவு செய்து விட்டார்கள். இந்த முடிவுகளை யாராலும் மாற்ற முடியாது. காரணம்: அவர்களுடைய பயம் அவர்களில் உறைந்து விட்டது. இதில் இன்னோர் சோகமான செய்தி என்று சொல்வதா அன்றேல் தீமை யான செய்தியென்று சொல்வதா புரியவில்லை! நான் செய்தியைச் சொல்கின்றேன். அது எவ்வகையானது என்று நீங்களே தீர்மானியுங்கள்.

**பக்கச் சார்பு**

இஸ்ராயேல் ஹமாஸ் உடன் போர்ப் பிரகடனம் செய்த மறுகணமே, வடஅமெரிக்க நாட்டின் செயலர் (வடஅமெரிக்க அரசில் இது ஒரு முக்கியமான பொறுப்புடைய பதவி) இஸ்ராயேலுக்கு பறந்து சென்றார். இஸ்ராயேலில் இருந்து உலகம் கேட்க ஓர் உரையாற்றினார். அந்த உரை முழுக்க முழுக்க போரை ஆதரித்துப் பேசிய உரை. "இஸ்ராயேலுக்கு ஆகவேண்டிய அனைத்து உதவிகளையும் நாம் செய்வோம்." என்று இடித்துரைத்தார். அவருடைய உரை நான் மேற்கூறிய "பைத்தியங்களின்" உரை யாகவே அமைந்தது. ஒரு வல்லரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரின் உரையாக அது அமையவில்லை. அவர் தம்மை இஸ்ரேயலுடன் அடையாளப்படுத்தியே பேசினார். அவருடைய நாட்டிலேயே அவருடைய உரைக்கு சிலர் ஓங்கிக் குரல் கொடுத்தார்கள். இந்தச் செயலரை ஒரு பயங்கர வாதி என்றும் அவர் போர்க் குற்றத்திற்காக விசாரணைக்குட் படுத்தப்பட வேண்டுமென்றும் அவர்கள் குரல் எழுப்பினார்கள். இவ்வண்ணம் குரலெழுப்பியவர்கள் வட அமெரிக்க வெள்ளை இன மக்கள். இவர்கள் இஸ்ராயேலுடன் தங்களை அடை யாளப்படுத்தாதவர்கள் என்பது இங்கே குறிப்பிடல் அவசியம்.

வடஅமெரிக்க அரச செயலர் இஸ்ராயேலுக்கு வந்து உரையாற்றிச் சென்றது போதாது என்று, ஒரு சில நாட்களின் பின்னர் வடமெரிக்க ஜனாதிபதியே இஸ்ராயேலுக்கு விஜயம் செய்து தனது செயலர் பேசிய அதே தோரணையில் உரை யாற்றிச் சென்றார். பின்னர், போர் உக்கிரமடைந்த, பொழுது, இஸ்ராயேல் படையினர் அனைத்துப் போர் விதிகளையும் மீறிப் பலஸ்தீனக் குழந்தைகள், பெண்கள், மருத்துவமனைகள் எதையுமே பொருட்படுத்தாது ஏவுகணைகளாலும் குண்டுப் பொழிவாலும் ஆக்ரோஷத்தோடும் மூர்க்கத்தனத்தோடும் பலஸ்தீன மக்களைக் கொன்று குவித்தது. "ஹமாசைப் பூண்டோடு அழிப்போம்." என்று "பைத்தியத்தனத்தோடு" பேசி, "வெற்றி காண்போம்" என்று இஸ்ராயேலின் பிரதமர் வெறித்தனத்தோடு பேசினார். சொற்களிலும் செயல்களிலும் வன்செயல் நிரம்பி வழிந்தது.

எதற்கும் "நான் சளைத்தவனல்ல" என்று கூறுவது போல, பிரித்தானியப் பிரதமரும் இஸ்ராயேலுக்குப் பயணம் மேற்கொண்டு, பிரித்தானியா இஸ்ராயேலின் நண்பன், உதவுவோம். என்று கூறினார். இவ்வளவுக்கும் இந்தப் பிரித் தானியப் பிரதமர் முழுக்க முழுக்க ஓர் இந்தியன். மூர்க்கத்தனமான, அரக்கத்தனமான இஸ்ராயேலின் போர்ச் செயல்கள், இன்னும் சில நாடுகளை ஹமாசுடன் சேரவைத்தது. இந்த நாடுகளுள் இரு வல்லரசுகள் உண்டு. இரு நாட்டுப் போர் பல நாடுகளைப் பக்கச்சார்பு கொள்ள வைக்கின்றது. பிரிவினை வளர்கின்றது. கொடிய மனிதர்கள் பிரிவினைகளை வளர்க்கிறார்கள். இக் கட்டுரையை எழுதும் பொழுது மேலும் சில மேற்கத்திய நாடுகள் இஸ்ராயேலின் அரக்கத்தனத்தைக் கண்டித்துப் பேசினார்கள். பிரான்ஸ், பெல்ஜியம் போன்ற நாடுகள் தான், அவை. கனடா பட்டும்படாமலும் இஸ்ராயேல் செய்வது தவறு என்று அடக்கி வாசித்தது. இரு நாட்டுப் போர் பல நாடுகளையும் பிரிக்கின்றது.

இதனால் தான் என்னவோ 1962ல் யூதரான ஏபிரகாம் ஜொசுவா எழுதினார்: "சிலர் குற்றவாளிகள்: எல்லோரும் பொறுப்புள்ளவர்கள்." பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜேர்மன் நாட்டு மெய்யியலாளர் இம்மானுவேல் காண்ட் கூறினார்: "எங்காவது மனித உரிமைகள் மீறப்படு கின்றனவோ, அது எல்லா இடங்களிலும் உணரப்படும்."

**பாதுகாப்பான நாடுகள்**

இவ்விடத்தே ஒரு விடயத்தைக் குறிப்பிட விரும்பு கின்றேன். அண்மையில் எடுத்த ஒரு கணக்கெடுப்பின் மூலம், வாழ்வதற்குப் பாதுகாப்பான நாடுகளுள், பிரித்தானியா 37வது இடத்தையும், வடஅமெரிக்கா 131வது இடத்தையும், எங்கள் நாடு 107வது இடத்தையும் பெறுகின்றன. ஏங்கள் அயல்நாடான இந்தியா 126வது இடத்தில் உள்ளது. இந்த நாடுகள் முதலில் தங்கள் நாடுகளில் உள்ள பரவலான வன்செயல்களைக் குறைக்க முயலவேண்டும்.

வாசகர்கள், முதலாவது நாடு எதுவென்று கேட்கலாம். ஐஸ்லாண்ட் முதலாவது இடத்தையும், டென்மார்க் இரண்டாவது இடத்தையும், அயர்லாந்து மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றன. இந்தக் கணக்கெடுப்பை நம்பலாமா? "பொருளாதாரமும் சமாதான மும்" என்ற பெயரில் இயங்கும் ஒரு தனித்துவமான நிறுவனத்தால் நடுவு நிலைமையுடன் எடுக்கப்பட்ட வரவுதான் மேற்கூறியவை. இதிலிருந்து பல நாடுகள் வாழ்வதற்குப் பாதுகாப்பில்லாத நாடுகள் என்பது தெளிவு.

பாதுகாப்பின்மை என்று கூறும் பொழுது, இதன் மறு பக்கம் வன்செயல்களாலும் பயங்கரவாதத்தாலும் நிறைந்துள்ள நாடுகள் என்று கொள்ளவேண்டும். இதுதான் நாகரிகத்தில் வளர்ந்த வன்செயல்கள்!

**பயங்கரவாதிகள்!**

இஸ்ராயேல் - ஹமாஸ் போரில் மேற்கத்திய நாடுகள் பல ஹமாசைப் பயங்கரவாதிகள் என்று முத்திரையிட்டுள்ளன. அதேவேளை, இஸ்ராயேல் இப்போரில் மூர்க்கத்தனமாக நடந்து கொண்டமையைப் பார்த்து, பல குரல்கள், ஹமாஸ், பயங்கரவாதிகள் என்று சொன்னால் இஸ்ராயேலும் பல மடங்கு பயங்கரவாதி கள் என்று முத்திரை யிட்டார்கள். "புலிகள்- இலங்கை இராணுவம்" போரில் ஈடுபட்ட பொழுது, புலிகளைப் பயங்கரவாதிகள் என்று பல நாடுகள் முத் திரை ஒட்டினார்கள். புலிகளை விட அதிவேகமாகவும், மூர்க்கத்தனமாகவும் போரில் ஈடுபடாத ஆயுதம் ஏற்காத மக்களை - குழந்தை கள், முதியோர், பெண்கள் உட்பட- ஆயிரக்கணக்கானோரை கொத்துக் கொத்தாகக் கொன்று குவித்த இலங்கை அரசும் பயங்கரவாதிகளே. இதை அன்ரன் பாலசிங்கம் பல தடவைகள் கூறியிருக்கிறார். ஆயினும், எந்த நாடா வது, எந்த நாட்டினராவது அதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. கத்தியைக் கத்தி என்று கூறுவது அவசியம். இருப்பினும், முத்திரைகள் ஒட்டிவிட்டால் போர் முடியுமா? வன்செயல்கள் இல்லாமல் போகுமா?

**அகத்தே பிளவு**

வன்செயல்களுக்குப் பின்னால், போர்களுக் குப் பின்னால் பயந்தான் காரணமென்று தோமஸ் மேர்ட்டன் கூறியதாக மேலே எழுதியிருந்தேன். அத்துடன், ஒருவர் மற்றவர்களை வெறுப்பது மட்டு மல்ல, தன்னையே வெறுப்பதும், ஒருவர் மற்றவர் களை நம்பாமை மட்டுமல்ல, தன்னையே நம்பாமை, மற்றவர்களை ஏற்றுக் கொள்ளாமை மட்டுமல்ல தன் னையே ஏற்றுக் கொள்ளாமை பயத்தோடு கூடிவரு வது, அல்லது இவற்றால் தான் பயம் வருகிறது. என்று விரித்துக் கூறலாம். இவற்றிற்குப் பின்னால் என்னவுண்டு என்று உளவழி நின்று ஆராயும் பொழுது, அகத்தே ஏற்பட்டுள்ள ஒரு பிளவு என்று கூறலாம். இந்தப் பிளவு என்னில் இருந்து என்னைத் துண்டிக்கின்றது. இந்தத் துண்டிப்பினால் ஏற்படுவது பயம். அகத்தே உள்ள கடவுளுடன் நான் பிரிந்திருக்கி றேன். "அவரோடு இணைந்திருக்கும் எவரும் பாவம் செய்வதில்லை" என்று யோவான் தனது முதலாவது திருமுகத்தில் எழுதியுள்ளார் (1யோவான் 4:6). மேலும் அதே திருமுகத்தில் நான்காவது அதிகாரத்தில் யோவான் எழுதுகிறார்: " அன்பில் அச்சத்திற்கு இடமில்லை: மாறாக நிறை அன்பு அச்சத்தை அகற்றிவிடும். ஏனெனில், அச்சத்தில் தண்டனை உணர்வு அடங்கி யுள்ளது: அச்சம் கொண்டுள்ளவரிடம் அன்பு முழு நிறைவு அடையாது" (18). அதாவது, அன்பு இருக்கு மிடத்தில் பயமிருக்காது. அன்பு இருக்குமிடத்தில் கடவுள் உண்டு. அன்பு இருக்குமிடத்தில் அகப்பிளவு இருக்காது. அன்பு இருக்குமிடத்தில் பிளவல்ல, இணைப்பு இருக்கும். இந்த அன்பிற்கு எல்லைகள் இல்லை என்று இயேசு தனது வார்த்தைகளாலும் வாழ்க்கையாலும் எடுத்துரைத்தார்.

**கரைவையூர்ச் செல்வம்**

**தெரிந்த இனம்!**

யூதர்கள் தங்களைத் தாங்களே கடவுளால் தெரிந்து கொண்ட இனமென்றும், இஸ்ராயேல் கடவுள் தங்களுக்குத் தந்த நாடென்றும் நூற்றாண்டுகளாகவே சொல்லி வருகிறார்கள். இன்றும், இஸ்ராயேல் - ஹமாஸ் போரின் பொழுது சொல்லி வருகிறார்கள். ஆயினும், தங்களைத் தெரிந்து கொண்ட கடவுளை விட்டு அவர் கள் வேறு தெய்வங்களை நாடிச் சென்ற வரலாறு பழைய ஏற்பாட்டில் உண்டு. அப்பொழுதெல்லாம் உண்மையான கடவுளிடம் "திரும்பிவா" என்று அறை கூவி இறைவாக்கினர்கள் தோன்றியதையும் அதே வரலாற்றில் படிக்கின்றோம். அந்த இறைவாக்கினர் களை யூதர்கள் கொன்றும் இருக்கிறார்கள். தம்மைச் சுற்றியுள்ள இனங்களோடும், நாடுகளோடும் போர் புரிந்த இரத்தம் படிந்த வரலாறு மறக்க முடியாது. யூதர் களுடைய வரலாற்றை எழுதுவது இக்கட்டுரையின் நோக்கமல்ல.

**அனைத்தையும் உள்ளடக்கியது**

உலகில் வாழும் அனைத்து மக்களும் கடவு ளின் மக்கள். மக்கள் அனைவரிலும் கடவுள் குடி கொண்டுள்ளார். எல்லோரையும் உள்வாங்கவேண்டு மென்பது போப் பிரான்சிஸ் அவர்களின் உறுதியான குரல். எந்த ஓர் இனமோ, மதமோ தங்களைத் தாங் களே கடவுளால் தாம் மட்டும் தெரிந்தெடுத்த இனம் என்று கூறுவது தவறு மட்டுமல்ல, பிரிவினையை வளர்ப்பதுமாகும். நான் ஏற்கனவே கூறியது போல இப்பிரிவினைகளில் பயமுண்டு, இப்பயம் வன் செயல்களையும் போர்களையும் வளர்த்துக் கொண்டே போகும். இன்று இஸ்ராயேல் யூதர் தவறான ஓர் அடையாளப்படுத்தலில், ஒரு மாயையை வளர்த்து தாம் மேம்பட்டவர்கள் என்று கூறுவது ஓர் ஆணவம்.

(தொடர்ச்சி 04ம் பக்.)




# ஏன் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(நிலா, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: 2023ஆம்ஆண்டில்மட்டும் ஒரு லட்சம் சிறார்களின் அந்தரங்கக் காணொளிகள் வலைத் தளங்களில்பகிரப்பட்டதாகக் காவல் துறைமா அதிபர்தெரிவித்துள்ளார். இது என்ன நாடு? இங்கு என்ன ஆட்சி நடக்கின்றது?**

ப: நிலா, இவ்வாட்சிக்கு அவர்கள் வைத்த பெயர் தான் 'நல்லாட்சி அரசு'! 'நல்லாட்சி' என்ற மகுடத்தோடு தொடங்கியவர்தான், இப்போது தலைமைப் பதவியில் இருக்கின்றார். இவரின் காலத்தில் தான் மேற்சொன்ன ஒரு லட்சம் 'றெக் கோட்'! நல்லாட்சியைத் தொடங்கியவரின் ஆட்சியிலேயே இப்படியிருக்கின்றது! இத்தகவலைச் சொல்வதற்குக் காவல்துறை மா அதிபர் வெட்கப்பட வேண்டும். ஆனால், வெட்கப்படாமல் சொல்லியிருப்பது பெரிய விடயம். இத்தனை பாதுகாப்புக் கட்டமைப்புக்களைக் கொண்ட நாட்டில், ஒதுக்கீட்டில் சுமார் மூன்றில் ஒரு பகுதியைப் பாதுகாப்புக்கு ஒதுக்கும் ஒரு தேசத்தில், ஓராண்டில் ஒரு லட்சம் சிறார்களின் அந்தரங்கக் காணொளிகள் வலைத்தளங்களில் பதியப்பட்டிருக்கின்றது என்றால் இதனை விட இன்னும் பல மடங்கு சிறுவர், பெண்களுக்கெதிரான துஷ்பிரயோகங்கள் நிச்சயமாக நடந்திருக்கும் என அடித்துக் கூறலாம். 'இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு' என்ற இந் நாட்டுக்கு இதனைவிட என்ன பெருமை கிடைக்கப் போகின்றது? தூ... மன்னிக்கவும் தும்மலும் சேர்ந்து வந்துவிட்டது!

(யோசப், யாழ்ப்பாணம்)

**கேள்வி: தமிழ்க் கட்சிகள் ஒன்று சேரும் எனக் கருதுகின்றீர்களா?**

ப: யோசப், சேரும் ஆனாச் சேராது!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கேள்வி: யாழ். செயலகத்தில்ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக 06.01. 2024 அன்று நீங்களும் சென்றிருக்கின்றீர்கள் என்பதை நிழற்படங்களில் காணக்கூடியதாக இருந்தது. ஏதும் பிரயோசனம் இருந்ததா?**

ப: ஆனந்தன், சர்வமத பிரதிநிதிகளில் ஒருவராகப் பங்கேற்க அழைக்கப்பட்டிருந்தேன். போன பின்னர் தான், போகாமலும் இருந்திருக்கலாம் என்றும், இன்னும் சிலநாள்களின் பின்னர் போகாமலே இருந்திருக்கலாம் என்றும் யோசித்தேன்! அது ஒருபுறமிருக்க, நாட்டைக் குறிப்பாக வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வது பற்றித் தான் ஜனாதிபதியின் முழு உரையாடலும் அமைந்திருந்தது. நாங்களோ, நாட்டில் குறிப்பாக வடகிழக்கில் அண்மைக் காலமாக மக்கள் சந்திக்கும் பிரச்சினைகளை அவரின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தோடு, நாட்டை அபிவிருத்தி செய்யவேண்டும், செய்வது நல்லது, ஆனால், அரசியல் தீர்வின்றி அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் அனைத்தும் பயனற்றவையாகி விடும் என்பதைத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் எடுத்துக் கூறினோம். இதனை, எழுத்திலும் தெரிவித்திருந்தோம். கேட்டாரா இல்லையா என்பது தெரியவில்லை! 'கேட்கச் செவியிருந்தால் கேட்டிருப்பார்'!

*(கலா, கனடா)*

**கேள்வி: பிள்ளைகளைப் பெற்று வளர்க்க விரும்பாத பெற்றோருக்கு என்ன ஆலோசனை கூறுவீர்கள்?**

ப: கலா, பிள்ளைகளை யார்தான் விரும்ப மாட்டார்கள்! அனைத்துப் பெற்றோரும் பிள்ளைகளை விரும்புவர்கள். ஆனால், பெற்று வளர்த்தெடுப்பதில் உள்ள கஷ்ரங்களைப் பலரும் விரும்புவதில்லை! பிள்ளைகளை வளர்ப்பதில் உள்ள சவால்களைச் சுமையாகப் பார்க்காமல், சுகமாகப் பார்க்க விளைந்தால், பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதில் உள்ள பெருமையை, சிறப்பை, அதன் பேறினை அனுபவிக்கலாம். அடுத்து, பிள்ளைகளைப் பெற விரும்பியும் அப்பேறு சிலருக்குக் கிடைக்காமல் போனால் என்ன செய்வது? அதற்காக அப்பெற்றோரைக் குற்றம் சுமத்த இயலாது. அதேவேளை பிள்ளைகளின் இடத்தை நாய்களும் பூனைகளும் சில வீடுகளிலே எடுத்து விடுகின்றன என்பதையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டி இருக்கின்றது. இந்நிலைமை, உண்மையில் கவலைக்குரியது! இதுபற்றிக் கூறுகின்ற திருந்தந்தை பிரான்சிஸ்: "எத்தனையோ திருமணதம்பதியினர் குழந்தைகள் பெற்றுக்கொள்ள விருப்பமில்லாமல் பல நாய்கள் பூனைகளை வீட்டில் வளர்க்கின்றார்கள். ஆம், இன்று, குழந்தைகள் வாழவேண்டிய இடத்தில் நாய்களும் பூனைகளும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன" என்று கவலையோடு குறிப்பிடுகின்றார். இந்நிலைமை நிச்சயமாகத் தவிர்க்கப்பட வேண்டியதே.



## மழலையர்

"நீங்கள் சிறு பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் விண்ணரசில் புகமாட்டீர்கள்" என்றார் இயேசு. "குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்" என்கிறது திருக்குறள். மனித இனத்தின் எதிர்காலமான மாசற்ற குழந்தைகள் பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாவதை ஒவ்வொருவரும் எதிர்க்கவேண்டும். ஏரோதின் சுயநல வெறிக்கு அன்று குழந்தைகள் பலியானதைப்போல், இன்றும் பலரின் சுயநலத்திற்காகப் பல நூறு பச்சியம் குழந்தைகள் பலியாகும் அவலம் தொடர்கிறது. அதிகாரம், ஆட்பலம், பண பலம் கொண்டவர்களால் மென்மையான சிறார்கள் பாலியல் வன்கொடுமைகளுக்கும், கடின வேலைகளுக்கும், போதைவஸ்துப் பாவனை மற்றும் விற்பனைக்கும் உட்படுத்தப்படுகின்றனர்.

இவர்களின் சக்தியற்ற மௌனத்தின் அழுகுரல் உலகின் சுயநலச் சத்தங்களையும் விட வீரியமுடையது. இப்பிஞ்சுகளைப் பிணைத்திருக்கும் சமுதாயச் சங்கிலிகளை அறுத்தெறிய, அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க நமது முயற்சிகள் தேவை. "குழந்தைகள் இறைவனுக்குச் சமம்" என்பதை இந்த உலகம் உய்த்துணர வேண்டும். மழலைகளின் மாண்புறு செயல்களில்தான் மனிதம் மலர்கிறது என்பதில் பெருமிதம் கொள்வோம்.



நன்றி: இந்தநாள் இனிய நாள்

## பாதுகாவலன் மறை அறிவுப் போட்டி - 2024

பாதுகாவலன் பத்திரிகையில் பாதுகாவலன் மறை அறிவுப் போட்டியொன்றை இவ்வாண்டில் ஆரம்பிக்கின்றோம். இப்பகுதியில் கத்தோலிக்க மறை அறிவை மேம்படுத்தும் நோக்கோடு திரு அவையின் படிப்பினைகள், சூழமைவியல், இறையியல் சிந்தனைகள் மற்றும் வத்திக்கான், உலகத் தலத் திருஅவை, கத்தோலிக்க செய்திகளை மையப்படுத்தி இவ்வினாவிடைப் பகுதி அமைகின்றது.

ஒவ்வொரு மாதமும் ஆரம்பத்தில் வெளிவரும் பாதுகாவலன் பத்திரிகையில் முன்னைய வினாக்களுக்கான விடைகள் வெளியிடப்படும். தெரிவு செய்யப்படும் முதன்மை வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் உயிர்ப்புப் பெருவிழாவின் போதும், கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவின் போதும் வழங்கப்படும்.

பத்திரிகை வெளியீட்டுத் திகதியிலிருந்து 20 நாட்களுக்குள் விடைகளைக் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**" பாதுகாவலன் மறை அறிவுப்போட்டி - 2024"**
**360, புனித வளன் கத்தோலிக்க அச்சகம்**
**பிரதான வீதி, யாழ்ப்பாணம்**
**- ஆசிரியர்**

16. திருவருட்சாதனங்கள் எத்தனை? அவை எவை?
17. உலகத்திரு அவையின் தலைமைச் செயலகம் அமைந்துள்ள நாடு எது?
18 திருவிவிலியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள புத்தகங்கள் எத்தனை?
19 'அன்பின் மகிழ்வு' திருமடல் யாரால் வெளியிடப்பட்டது?
20. 2024 இல் மருதமடு அன்னையின் திருச்சொரூபத்தின் யாழ் மறைமாவட்டத்திற்கான சுற்றுப்பயணம் நடைபெறும் காலம் என்ன?
21. தற்போதைய அகில உலக நற்செய்திப் பேராயத்தின் தலைவராக இருப்பவர் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
22. யாழ் மறைமாவட்டத்திலிருந்து உருவாகிய மறைமாவட்டங்கள் எவை?
23. புனித டொன் பொஸ்கோ எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
24. புனித அன்னை தெரேசா பணியாற்றிய இடம் எது?
25. தாவீது மன்னனின் வரலாறைக் கூறும் விவிலிய நூல்கள் எவை?
26. திரு அவையின் மறைக்கல்விக் கொள்கைத்திரட்டை தொகுத்தவர் யார்?
27. மறுமலர்ச்சிக் காலத்தில் திரு அவையின் பிளவுக்கு வித்திட்டவர் யார்?
28. யாழ் மறைமாவட்டக் கத்தோலிக்கப் பாடசாலைகள் யாருடைய காலத்தில் சுவீகரிக்கப்பட்டன?
29. திரு அவையில் பொதுநிலையினர் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பொதுச்சங்கம் எது?
30. இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் இருபெரும் தூண்களாகக் கருதப்படும் திருத்தந்தையர்கள் யார்?
31. யாழ் மறைமாவட்டம் பெற்றெடுத்த இரு துறவற சபைகளும் எவை?
32. யாழ் மறைமாவட்டத்தில் உள்ள மறைக்கோட்டங்கள் எவை?
33. விவிலியத்தில் ஞானத்தில் தலை சிறந்த மன்னனாகக் கருதப்படுபவர் யார்?
34. இலங்கையின் திருத்தூதராகக் கருதப்படும் புனிதர் யார்?
35. தற்போதைய இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி யார்?
36. உலகத் திரு அவையின் தற்போதைய தலைவர் எந்தத் துறவற சபையை சார்ந்திருந்தார்?
37. யாழ் மறைமாவட்டத்திற்குரிய யாத்திரைத் தலங்கள் நான்கு தருக?
38. திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் யாரால் சுடப்பட்டார்?
39. திரு அவையின் நம்பிக்கையின் அடித்தளமாக விளங்கும் இரண்டு தளங்கள் எவை?
40. 'உடக்குப் பாஸ்' இன்றும் மேடையேற்றப்படும் தமிழ்ப் பங்கு எது?

**தொகுப்பு: அருட்பணி. தே. யூட்தாஸ்**

## போர்களும் ....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

**உலகளாவியவர்**

இயேசு ஓர் மதத்தினருக்குச் சொந்தமானவர் அல்ல. அவர் உலகளாவியவர். அவரது அன்புச் செய்தி உலகளாவியது. அவர் யூத இனத்தில் பிறந்து வளர்ந்தாலும், தனது வாழ்வால், ஆன்மீகத்தால் யூதத்தை மேவியவர். அவர் யூதத்தோடு தம்மை அடையாளப்படுத்தியவர் அல்ல. அதனாலேயே யூதத்தைக் கடுமையாக விமர்சித்தார். யூதத்தில் இருந்து தன்னைத் தனியாக்கி, அங்கு ஏற்பட்ட பரப்பகலத்தில் விடுதலை பெற்று யூதத்தை அவர் மூன்றாவது ஆளாக நின்று பார்த்தார். அப் பார்வையிலே யூதத்தின் தவறுகளை, பரிசேயத் தனத்தை நன்கே பார்த்துக் கடுமையாக விமர்சித்து, யூதத்தை அன்பு வழிக்கு அழைத்தார். அவர்கள் இன்றுவரை வந்ததாகத் தெரியவில்லை! "ஐயோ கேடு" - நான் சொல்லவில்லை: இயேசு அன்றே சொன்னார்.

இந்த அன்புடன் நாமனைவரும் பிறந்தோம். அதிலிருந்து விலகும்பொழுது, பயம் உருவாகிறது. மனம் மாறி, அகத்தே உள்ள அன்பை நோக்கிப் பயணிப்பது தான் ஆன்மீகப் பயணம். அப்பொழுது பயம் அகலும். வன்செயல்கள் அழியும். ஒற்றுமைக்கு இதுவே வழி.

## இன்சொல்

கனிவான ஒரு சொல் கடுமையான பாதையையும் செப்பனிடும். மகிழ்ச்சியான ஒரு சொல் அந்த நாளையே வெளிச்சமாக்கும். நேரத்திற்கு உகந்த சொல் இறுக்கத்தைத் தளர்த்தும். அன்பான ஒரு சொல் காயத்தை ஆற்றிவிடும். ஒரே ஒரு சொல்லால் மற்றவர்களின் வாழ்வு மாறுகிற அளவுக்குப் படைப்பாற்றல் சூத்திரம் அச்சொல்லுக்குள் அடங்கியுள்ளது.

இயந்திரங்களின் உந்து சக்தியை விட சொற்களின் உந்து சந்தி மிகமிக வேகமானது. புனித ஆசீர்வாதப்பரின் சொற்கள் புனித கொலாஸ்ரிகாவிற்கு ஆன்மீக உயிர் தந்தது. நம்முடைய சொற்கள் பிறருடைய இதயத்தில் விதையாக விழட்டும். நல்வார்த்தைகள் இவ்வுலகை ஆட்சி செய்யட்டும். பணித்தளங்களில் நாள்தோறும் மகிழ்ச்சிப் பூக்கள் மலர்ந்திட அன்பான, கனிவான இன்சொற்கள் என்ற நன்னீரை நம் நாவினால் பாய்ச்சி இதமான அன்பை மக்கள் உணரச் செய்வோம்.

# அன்பின் மகிழ்வு

02



(திருத்தூது உலை இலக்கம் 1)

## குடும்பத்தின் மகிழ்வே திருஅவையின் மகிழ்வாகும்

குடும்பங்களின் மீது மிகவும் அன்பும் கரிசனையும் கொண்ட நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குடும்பத்திற்கும் திருச்சபைக்கும் இடையே இருக்கின்ற பிணைப்பைத் தன் திருத்தூது மடலில் சுட்டிக் காட்டுகின்ற போது இவ்வுலகில் குடும்பங்கள் அனுபவிக்கும் அன்பின் மகிழ்வு திருச்சபையின் மகிழ்வாக இருக்கின்றது என்று மிக அழகாகக் குறிப்பிடுகின்றார். இரண்டு முறை நடைபெற்ற ஆயர் மன்றங்களில் பங்கு பற்றிய தந்தையர்கள் இக் காலத்தில் திருமணம் எனும் அமைப்பு சந்திக்கும் பல்வேறு விதமான நெருக்கடிகளைப் பல்வேறு கோணங்களில் மிகவும் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளனர். இவ்வாறான சவால்களுக்கு மத்தியிலும் இக் கால இளையோர் திருமணம் செய்து ஓர் குடும்பத்தை அமைக்க உயிர்த்துடிப்புடன் காணப்படுகின்றனர். இந்த உயிர்த் துடிப்பானது திருஅவைக்குப் பெரும் தூண்டுதலாக இருக்கின்றது என்று திருத்தந்தை குறிப்பிடுகின்றார். இந்த நிலைப்பாடு தற்காலத்தில் திருமணம், குடும்பம் என்கின்ற நிறுவனங்களுக்கான மிகப்பெரும் ஆதாயமாக அமைகின்றது. ஆதியில் முதற்பெற்றோராகிய ஆதாம், ஏவாளை உருவாக்கி அவர்களை தம்பதிகளாக ஆசீர்வதித்த காலத்தில் இருந்து திருமணம் என்கின்ற அமைப்பானது நீண்டகாலப் பாரம்பரியங்களைக் கொண்ட அமைப்பாகவும், அதற்கு மேலாக ஓர் அருட்சாதனமாகவும் திகழ்கிறது. பல்வேறு விதமான சவால்களைத் திருமணம் சந்தித்த வேளையிலும் எம் இளையவர்கள் திருமணத்தின் மீது கொண்டிருக்கின்ற பற்றுறுதியும் ஆர்வமும் திருஅவைக்கு ஓர் நிறைவையும் மகிழ்வையும் கொடுக்கின்றது.

### இளையோரே திருஅவையின் எதிர்காலம்

இளையோரே திருஅவையின் எதிர்கால மாக அமைவதனால் இவர்கள் திருமணம் முடித்துக் கிறிஸ்தவ விழுமியங்களுக்கு அமைய ஓர் குடும்பத்தை அமைக்க வேண்டும் என்ற ஆசையை வெளிப்படுத்தும் போது அக்கருத்தின் பொருட்டு திருஅவை அகமகிழ்கின்றது. காரணம் இவ்வாறான திருமணங்களின் உருவாக்கத்தில் தான் திருஅவையின் படிப்பினைகள், விழுமியங்கள் தொடர்ந்தும் சமுதாயத்தில் வாழப்படுகின்றது.

திருஅவையின் படிப்பினைகளின் படி திருமணமும் குடும்பமும் மனுக்குலத்திற்காக இறைவன் வகுத்த மிகப் பெரும் திட்டமாகும். எனவே இளையோர் திருமணத்திற்கான ஆசையை வெளிப்படுத்தும்போது அவர்கள் கடவுளின் உன்னத மான திட்டம் நிறைவேறத் தங்கள் பங்களிப்பை வழங்குகிறார்கள் என்று திருஅவை மகிழ்கின்றது.

குடும்பங்களானது திருஅவையினதும் சமூகத்தினதும் அடிப்படை அலகு ஆகும். எனவே இளையோர்கள் அன்பில் நிலைத்து நிற்கும் குடும்பங்களை அமைக்கும் போது குறிப்பாகத் திருஅவையின் படிப்பினைகளான அன்பு, அர்ப் பணம், தன்னலமற்ற நிலை என்ற திருஅவையின் போதனையின்படி குடும்பங்களை அமைக்கும்போது அது திருஅவையினதும் சமூகத்தினதும் வளர்ச்சிக்குத் துணையாக இருக்கின்றது. இன்றைய உலகத்தில் சுயநலம், உலகியல் போக்கு என்பவை மலிந்து காணப்படும் நிலையில் இளையோர்கள் திருச்சபையின் கோட்பாடுகளுக்கு இணங்கத் திருமணம் முடித்து சுயநலமற்ற ஆன்மீக நறுமணமுள்ள குடும்பங்களை அமைக்கவிரும்புவதுதிருஅவைக்கு மகிழ்வை அளிக்கும் நற்செய்தியாகும்.

எனவே இன்றைய சமூகத்திலே குடும்பங்கள் பற்றிய எதிர்மறையான நிலைப்பாடுகளைத் தகர்த்து குடும்பம், திருமணம் பற்றிய திருஅவையின் உறுதியான நிலைப்பாட்டை உறுதிபட உரைக்கின்ற நம் இளையோருக்காக நன்றி கூறுவோம். எங்கள் குடும்பங்களிலும் நம்மறைமாவட்டத்திலும் உள்ள நம் பிள்ளைகள் கொண்டிருக்கும் திருமண அருட்சாதனத்தின் மீதான ஆர்வத்திற்காகவும், திருமண வாழ்வின் மூலம் நல்ல குடும்பத்தை அமைக்க இருக்கின்ற விருப்பத்திற்காகவும் கடவுளுக்கு நன்றி கூறுவோம். ஒவ்வொரு மாதமும் அகவொளி குடும்ப மையத்திற்குத் திருமண ஆயத்தத்திற்கு வரும் இளைஞர் யுவதிகளிடம் இருக்கும் உத்வேகம் நம் மறைமாவட்டத்திற்கான ஓர் நற்செய்தியாகும். குறிப்பாக குடி, போதைவஸ்து பாவனை, குடும்ப வன்முறை போன்ற பல்வேறு விதமான தாக்கங்களுக்கு உட்பட்டு இருக்கின்ற குடும்பங்களில் இருந்து வரும் பிள்ளைகள் அதன் தாக்கத்தில் இருந்து விடுதலை பெற்று இறைவனின் திட்டத்தின் உயரிய பொறுப்பாகிய திருமணம் என்கின்ற அருட்சாதனத்தைப் பெற இறை அருள் வேண்டுவோம்.

அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்
அகவொளி குடும்ப நல மையம்

## அகவொளி குடும்ப நலமையம் திருமண சேவை

**மணமகன் தேவை**



வயது :- 29
சமயம் :- றோமன் கத்தோலிக்கம்
கல்வித் தகைமை :- B.Sc(Hons) in Agriculture Science
தொழில் :- Management Assistant
பிரதேச செயலகம் :- கரவெட்டி

**வாழ்க்கைத்துணை பற்றிய எதிர்பார்ப்பு**

- முன்னுரிமை அரசாங்க அல்லது தனியார் துறையில் தொழில் புரிதல்.
- பட்டதாரியாக இருந்தால் விரும்பத்தக்கது.
- அடுத்தபடியாக வெளிநாடும் பரிசீலிக்கப்படும்.

**மணமகள் தேவை**

வயது :- 38
சமயம் :- றோமன் கத்தோலிக்கம்
கல்வித் தகைமை :- க.பொ.த. சாதாரண தரம் (O/L)
தொழில் :- கடற்தொழில்
பிரதேச செயலகம் :- வங்காலை கிழக்கு 99

**வாழ்க்கைத்துணை பற்றிய எதிர்பார்ப்பு**

- நல்ல குணமுடைய, ஆழமான விசுவாசமுடைய குடும்பத்திற்கு ஏற்ற பிள்ளை.

## சிந்தனைக்கு விருந்தாக:

"என் கண்களுக்கு என் கணவரே தெரிந்தார்"

பேசிய நாட்டுப் படைத்தளபதியின் மனைவிக்கு அரசருக்கு எதிராகச் செயற்பட்ட குற்றத்திக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டது. நடந்ததை உணர்ந்த அவரது கணவன் பதறியபடி அரண்மனைக்கு ஓடி வந்து மன்னன் முன்னிலையில் தரையில் விழுந்து "அரசரே என் மனைவியின் உயிருக்குப் பதிலாக என் உயிரைப் பறித்து விடும். என் மனைவியின் உயிரைக் காப்பாற்ற நான் அவருக்காக இறக்க ஆயத்தமாக இருக்கிறேன்" என்று இரந்து வேண்டினான். உன்னதமான மற்றும் உணர்திறன் மிக்க மன்னனாக இருந்த சைரஸ் மன்னன் இப்படிப்பட்ட ஒரு காதல், அன்பு மரணத்தாலும் பிரிக்கப்படக் கூடாது என நினைத்து அந்த மனைவிக்கு மன்னிப்பளித்து அவரை அவரின் கணவனிடம் ஒப்படைத்தார்.

இவ்வாறு உயிர் தப்பிய மனைவியும் கணவனும் மகிழ்வோடு நடந்து போகும் வேளையில் கணவன் தன் மனைவியைப் பார்த்து 'மன்னன் எங்களுக்குப் பெருந்தன்மையோடு மன்னிப்பு வழங்கிய வேளையில் மன்னன் எவ்வளவு இரக்கம் நிறைந்த அன்போடு எங்களைப் பார்த்தார். என்பதை நீ கவனித்தாயா?" எனக் கேட்டார். அப்பொழுது மனைவி சொன்ன பதில் திருமணத்தின் உன்னத நிலையை எடுத்து இயம்புகிறது. அதாவது "அந்த வேளையில் என் கண்கள் அரசனை அல்ல மாறாக எனக்காக தன் உயிரையே கொடுக்க ஆயத்தமாக இருந்த என் அன்புக் கணவனையே உற்று நோக்கிக் பார்த்துக்கொண்டு இருந்தது" என்று உணர்ச்சி மிகுந்தவளாய் கண்ணீரோடு கணவனைப் பார்த்துப் பதில் அளித்தாள்.

அன்னை திரேசாவின் குடும்பம் பற்றிய பொன் மொழி:
அன்னை திரேசாவிடம் ஒருவர்: உலகத்திற்கு சமாதானத்தைக் கொண்டு வர நான் என்ன செய்ய முடியும்?
அன்னை திரேசாவின் பதில்: "வீட்டுக்குப் போய் உன் குடும்பத்தை அன்பு செய்"

# ஒரு கிலோ மிளகாய்த்தூள்



சிறுகதை

மனோ சின்னத்துரை

தமிழ்க்கடையில் கொள்வனவுக்காக சியாமளாக்கா தயாரித்த பட்டியல் கீழ்வருமாறு இருந்தது.

| | |
|---|---|
| 20 கிலோ சிவத்தைப் பச்சை அரிசி | மஞ்சள் 2 கிலோ |
| 20 கிலோ மா | உள்ளி 5கிலோ |
| 1 கிலோ மிளகாய்த்தூள் | இஞ்சி 5 கிலோ |
| கற்பூரம் 4 பெட்டி | தேசிக்காய் 2 கிலோ |
| மிளகு 2 கிலோ | கறிவேப்பிலை 2 கட்டு |

பட்டியலைப் பார்த்த அக்காவின் கணவர் கொடுப்புக்குள் சிரித்தார். அவரின் கணக்குப்படி இதில் இந்த மிளகாய்த்தூள் மட்டுமே ஓரளவு நியாயமானதாய் இருந்தது. ஏற்கனவே வீட்டின் ஒரு மூலை, முன்னெச்சரிக்கையாக வாங்கி அடுக்கப்பட்ட பொருட்களால் நிரம்பி வழிந்தது. ஏற்கனவே காலாவதியின் விளிம்பில் இருக்கும் பொருட்கள் அதிக நாட்களுக்குத் தாக்குப்பிடிக்க மாட்டாது என்பதைச் சியாமளாக்காவின் கணவர் சிவரஞ்சன், எவ்வளவு எடுத்துச் சொல்லியும் அவ கேட்டதாயில்லை.

சியாமளாக்கா, சிவரஞ்சன் சொல்வதைவிட அயலட்டை சொல்வதில்தான் அதிக அக்கறை காட்டினார். இந்த அக்கறையே வீட்டில் பொருட்கள் நிரம்பிவழிய முக்கிய காரணம். அந்தாளும் நாய்வாலை நிமிர்த்தமுடியாது என்று ஒரு எல்லைக்கு மேல் முயற்சித்ததில்லை. கடைக்கு ஓடர் கொடுத்து ஒரு கிழமைக்கு மேல் ஆகிவிட்டது. சியாமளாக்காவுக்கு நித்திரை வரவில்லை. 'அயலட்ட தமிழ் வீடுகளெல்லாம் தமிழ்க் கடைப் பொருட்களாலும் நிரம்பி வழிய எங்கட வீட்டிலும் ஏன் அந்தக்குறையை விடுவான்' என்று அங்கலாய்த்த அக்கா, மாறிமாறி போன் பண்ணியபடி இருந்தா.'கொண்டு வந்து தாறனெண்டவை தருவினம்தானே! நீர் ஏன் பதகளிக்கிறீர்' என்று சிவரஞ்சன் ஆறுதல் படுத்த முயன்றார். ஆனால் தோற்றுப்போனார்.

'நீங்கள் கொணர்ந்து தாறீங்களோ அல்லாட்டி வேற கடைக்கு சொல்லட்டோ' என்று வீறாப்பு பேசவும் முடியாத நிலையில் அக்கா இருந்தார். ஏனெனில் அந்த வட்டாரத்துள் அந்த காலில் விழுந்து பொருட்களைக் கொள்வனவு செய்தபின் அயல் வீட்டுத் தொலைபேசிகள் மாநாடுகள் நடத்தின. ஒவ்வொரு பொருட்களின் விலைகளையும் மிகத் துண்ணியமாக ஆராய்ந்து, பழைய விலைகளுடன் ஒப்பிட்டுத் திட்டித்தீர்த்துக் கொண்டிருந்தன அவை. சியாமளாக்காவுக்கான பொதி வந்துசேர்ந்தது. ஏற்கனவே, திட்டமிட்டபடி தாக்குதலுக்குத் தயாரான போராளி கணக்கில் அக்கா இருந்தா. மூன்று மாடி ஏறி மூச்சிரைக்க வந்த பெடியன் கதவிலும் கைபிடிக்காதபடி மிக நுட்பமாக அவ தங்கள் வீட்டு பல்கனிக்கு அழைத்துப்போனா.

மூன்று தடவையாக பொருள் விநியோக இளைஞன் மூச்சிரைக்கப் படி ஏறி னான். தயார் நிலையிலிருந்த என்வலப்பினை அக்கா 'டொங்' என்று அவன் கைகளில் போட்டபோது, அவன் ஒரு அப்பாவிப் பார்வையை அக்காமேல் எறிந்துவிட்டுப் போனான். நான்கு மணி நேர இடைவெளியின் பின் அக்கா கையுறையின் உதவியுடன் பெட்டிகளைப் பிரித்து பொருட்களைப் பரவிக் காயவைத்தா.

அதிக நேரம் மினக்கெடவில்லை. கொரோனாப் பூச்சி வீட்டுக்குள் நுழைந்து விடக்கூடும் என்ற அச்சத்தில் அக்கா 'சடக்'கென பல்கனிக் கதவைப்பூட்டி உள் அடைந்து கொண்டா. சரியாக, காத்திருந்து 24 மணிநேரம் கடந்த பின் மீண்டும் கையுறை மற்றும் முகக்கவசத்துடன் அக்கா போர்க்களம் புகுந்தார். ஒவ்வொரு பொருட்களாகச் சரிபார்த்துக்கொண்ட போது ஒரு கிலோ மிளகாய்த்தூள் போத்தல் 'மிஸ்' பண்ணியது. அக்காவுக்குக் கோபம் தலைக்கேறியது. திரும்பவும் 'சடக்'கெனக் கதவை அடித்துச் சாத்தியபடி வீட்டிற்குள் நுழைந்தார்.

சிவரஞ்சன் சிவனே என்று ரீவிக்குள் தலை புதைத்து, செய்தியில் மூழ்கியபடி இருந்தார். இன்னும் ஒரு மாதகாலம் வீட்டிற்குள் முடங்கவேண்டுமென்ற பிரெஞ்சு அதிபரின் செய்தி அவருக்குப் பெரும் இடியாய் வந்திறங்கியது. 'உங்களின்ர நச்சரிப்பால தான் மிளகாய்த்தூள் போத்தில் துலைஞ்சது' என்று எரிந்து விழுந்தார் அக்கா.'சரியப்பா விடும்! விடும்!! என்ன ஒரு 9 யூரோ தானே! அதுகள் எவ்வளவு 'றிஸ்க்' எடுத்துக் கடை நடத்துதுகள். நீர் என்னடா எண்டா வீட்டுக்க இருந்து கொண்டு...' என்று சமாளிக்க முயன்றார் சிவரஞ்சன்.

'ஆமோ! அப்பிடியோ! காசென்ன மரத்திலயே காய்க்குது' என்றபடி அவசர அவசரமாகத் தொலைபேசி மாநாட்டைக் கூட்டினார் சியா. மாநாட்டின் முடிவில் 'உது விடேலாது! அக்கா, இல்லாட்டிச் சொல்லுங்கோ! நாங்கள் கதைக்கிறம்' என்று ஏகோபித்த குரலில் உறுப்பினர்கள் உசுப்பேத்தினார்கள்.

அக்காவால் இலகுவாகத் தொலை பேசியில் தொடர்பு கொள்ள முடியவில்லை. இது அக்காவுக்கு இன்னும் இரத்த அழுத்தத்தைக் கூட்டியது. 'சியாமளா! உம்மட உயிரின்ர பெறுமதி ஒன்பது யூரோவை கூட. பேசாமல் விடுமப்பா' என்று திரும்பவும் கெஞ்சிப்பார்த்தார் சிவரஞ்சன். அக்கா விட்டபாடாயில்லை. அக்காவின் தொடர் போராட்டம் வெற்றியளித்தது. அக்காவா! கொக்கா!! ஒரு கிலோ மிளகாய்த்தூளும், தவறுக்குப் பிராயச்சித்தமாக ஒரு சின்னப்பெட்டிக் கற்பூரமும் இலவசமாகக் கிடைத்தது.

மூன்று நாட்களால் பல்கனியைத் துப்பரவு செய்த அக்கா. அங்கே, ஒரு பூச்சாடியின் பின்னால் வெய்யிலில் காய்ந்து கொண்டிருந்த ஒரு கிலோ மிளகாய்த்தூள் போத்தலொன்று அக்காவைப் பார்த்துத் திருதிருவென முழுசியது.



# செபமாலையின் வீரர்கள்

## 09 ஒரு ஆன்மீக ஆயுதத்தின் வரலாறும் அதன் வீரர்களும்

**Champions of the Rosary - The History and Heroes of a Spritual Weapon**
**by Donald H. Calloway MIC (Marian Fathers of the Immaculate Conception)**
**(–தமிழில் – அருட்பணி.எஸ்.வி.பி. மங்களராஜா) டொனால்ட் எச். கலோவே**
MIC (Marian Fathers of the Immaculate Conception)
அமல உற்பவ மரியாளின் குருக்கள் துறவறசபை

**செபமாலைப் பக்திச்சபை**
(10.12.2023 இன் தொடர்ச்சி)

புனித சாமிநாதர் தமது வாழ்நாளில் குறிப்பாக எத்தனை இதுபோன்ற சபைகளை ஏற்படுத்தினார் என்று கூற முடியாவிட்டாலும் அவரது இறப்பின் பின் இது போன்ற சபைகள் ஐரோப்பா முழுவதும் பரவலாக ஏற்படுத்தப்பட்டன என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. எடுத்துக்காட்டாக பிரான்சில் உள்ள லிலீ (Lille) எனுமிடத்தில் புனித பேதுருவின் சர்வகலாசாலையுடனிணைந்திருந்த ஆலயத்தில் 1231ம் ஆண்டின் முத்திரையிடப்பட்ட இச்சாலை பற்றிய குறிப்புக்களைக் கொண்ட மிகப்பழைய இப்பதிவுப்பட்டியலில் தோல் சுருள் ஒன்று பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இச்சபை சம்பந்தமான பல பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன் இப்பதிவில் பல பக்தியுள்ள பெண்களின் பெயர்களும் உள்ளன. இவர்கள் பணத்திற்கும், மெழுகுவர்த்திகளுக்கும், மரியாளின் திருப்புகழ்மாலைகளை வழங்கி வந்துள்ளார்கள். சாமிநாதர் சபையின் பாரம்பரியம் கன்னிமரியாளின் பக்திச் சபைகள் (அனேகமாக செபமாலைப்பக்திச் சபைகள்) சாமிநாதர் சபை மடங்களில் மாந்துவாவிலும் 1255ல் பெருஜியாவிலும், பாவியாவிலும் 1258 இலும், 1272 லூக்காவிலும் நிறுவப்பட்டுள்ளன. என்று ஏற்றுக் கொள்கின்றது. இதற்கு மேலாக 1288ம் ஆண்டு ஓர்வியேற்றோ எனும் அழகிய நகரில் பரிசுத்த கன்னிமரியாளதும் புனித சாமிநாதரதும் சபை அல்லது அமைப்பு ஒன்று இயங்கத்துவங்கியது. இச்சபைகள் எல்லாமே அனேகமாக செபமாலைப்பக்திச் சபைகளே.

பாப்பரசர் 5ம் சிக்ஸ்துஸ் (1585-1590) 16ம் நூற்றாண்டின் இறுதி வருடங்களில் எழுதும் போது 13ம், 14ம் நூற்றாண்டுப்பாப்பரசர்கள் 4ம் ஊர்பன் (1261-1264), 22ம் அருளப்பர் (1316-1334) ஆகியோர் செபமாலைப் பக்திச்சபைகளுக்குப் பல்வேறு பலன்களை வழங்கியுள்ளனர். என்று குறிப்பிட்டுள்ளார். புனித சாமிநாதர் வாழ்ந்த நூற்றாண்டிலேயே செபமாலைப்பக்திச் சபை இயங்கியது என்பது நம்பக்கடினமாயிருக்குமளவுக்கு வியப்பாயுள்ளது. பாப்பரசர் 5ம் சிக்ஸ்துஸ் பின்வருமாறு எழுதுகின்றார் 'பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் தூண்டப்பட்டதாக நம்பப்படும் இரவலர் போதகர்சபை நிறுவுநராகிய புனித சாமிநாதரினால் வடிவமைக்கப்பட்ட என்றும் கன்னியான மகிமை பொருந்திய இறைவனின் தாயாராகிய மரியாளின் செபமாலை என அழைக்கப்படும் மிகவும் புனிதமான திருப்புகழ்மாலை ஏற்படுத்தப்பட்டமை எமது சமயத்திற்கு எவ்வளவு மிகப்பெரிய உதவியாக இருந்து வந்துள்ளது என்பதை நாம் நினைவுகூர்கின்றோம்'. அத்துடன் அப்போதிலிருந்து உலகிற்கு இதனால் கிடைத்து வந்தது மட்டுமல்ல, இன்றும் தொடர்ந்து கிடைத்துக்கொண்டிருக்கும் நன்மைகளையும் நினைத்துப்பார்க்கின்றோம். இவற்றின் விளைவாக உலகில் உள்ள பல்வேறு ஆலயங்கள், சிற்றாலயங்கள் மற்றும் வழிபாட்டிடங்கள், மேடைகள் ஆகியவை திருஅவை ஒழுங்கு முறைகளுக்கேற்ப ஆண், பெண் பொதுநிலையினரால் பரிசுத்த கன்னிமரியாளின் செபமாலையின் பரிந்துரையை முன்வைத்து அர்ப்பணிக்கப்பட்டு வருகின்றன. மேலும் இவற்றுடன் தொடர்பில் உள்ள சகோதர சகோதரிகள் அவர்களது முயற்சிகளுக்கேற்ப இந்தப் பக்திச் சபைகள் தேவையான அங்கீகாரத்தைப் பெற்று வளர்ச்சியடைந்துள்ளமையெல்லாம் விசேடவிதமாக மகிழ்வுடன் நினைவுகூரப்பட வேண்டிய பாப்பரசர்கள் 4ம் ஊர்பான், 22ம் அருளப்பர் ஆகியோர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புனித சாமிநாதர் வாழ்ந்த நூற்றாண்டிலேயே வாழ்ந்த ஒரு பாப்பரசராலேயே இச்செபமாலைபக்திச் சபை உறுப்பினர்களுக்குப் பலன்கள் வழங்கப்பட்டுள்ளமையை மேற்படி குறிப்பு உறுதிப்படுத்துவதால் இதன் வரலாற்று உண்மைத் தன்மையைக் குறைத்து மதிப்பிட முடியாது. அதே அறிக்கையில் பாப்பரசர் 5ம் சிக்ஸ்துஸ் தாம் பாப்பரசராக இருந்த காலத்துக்கு முன்னர் செபமாலைப் பக்திச்சபைக்குப் பலன்கள் வழங்கிய 13 பாப்பரசர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். அதற்கு மேலாக அடுத்த பகுதியில் நாம் பார்க்கப்போவது போல 14ம், 15ம் நூற்றாண்டுகளில் இப்பக்திச் சபை அநேகமாகக் கைவிடப்பட்டு மறக்கப்பட்டிருந்தாலும் பாப்பரசர்கள் தொடர்ந்து இச்சபைக்குப் பலன்களை வழங்கிச் சபையின் இருப்பை ஏற்ற வண்ணமேயிருந்தனர். என்பது கவனிக்கற்பாலது.

**ஆரம்பகால சாமிநாதர் சபையினர்**

பாப்பரசர் 3ம் ஓனோரியுஸ் (Honorius III); (1216-1227) (பிரசங்கிமார் சபை) சாமிநாதர் துறவற சபை நிறுவியமையை 1216ம் ஆண்டு அங்கீகரித்த போது புனித சாமிநாதரின் வருங்கால ஆன்மீகப் புதல்வர்கள் இனிமேல் இறை நம்பிக்கையின் காவலர்களாகவும் உலகின் உண்மையான ஒளிவிளக்குகளாகவும் திகழ்வார்கள் என்று குறிப்பிட்டார். 1221ம் ஆண்டு புனித சாமிநாதர் இறந்த பின் அவரது சபையினர் திருஅவைமுழுவதும் திருச்செபமாலைப் பக்தியைப் பரப்புவதற்காக அயராதுழைத்தனர். அதுதான் இருளை அகற்றி ஒளியைப்பாய்ச்சிப்பல ஆன்மாக்களைத் திரும்பவும் கிறிஸ்துவின் பக்கம் கொண்டுவருவதற்கு இவர்கள் பயன்படுத்திய ஒளிப்பந்தம். எடுத்துக்காட்டாக சாமி நாதர் சபையின் முதல்வர் தந்தையாகிய அருளாளர் சக்சனியைச் சேர்ந்த ஜோர்டான் (1190-1237) தமது சக சகோதரர்களுடன் 'அருள்மிகப் பெற்ற மரியே' சொல்லிச்செபிக்கும் போது தியானக்கருத்துக்களை வழங்கிக் கொண்டிருப்பார். இவர் தமது வாழ்நாளில் இச்செபமுறையைப் பின்பற்றும்படி எல்லோரையும் பயிற்று வித்து உற்சாகப்படுத்துவார். இங்கு எவ்வித சந்தேகத்துக்குமிடமின்றி இவர் மற்றவர்களுக்குச் செபமாலையைப் பயிற்றுவித்தார் என்றே கூறவேண்டும். சாமிநாதர் சபையின் குருவும் திருஅவையின் மறைவல்லுனரும் மிகவும் தேர்ச்சிபெற்ற கல்விமானுமாகிய புனித பெரிய அல்பர்ட் (1193-1280) கன்னிமரியாள் பற்றிய இறையியல் ஆக்கமாகிய 'பரிசுத்த மரியாள் மட்டிலான புகழ்ச்சி' எனும் நூலின் படைப்பாளியாவார். இந்நூலில் இவர் கன்னிமரியாளை ஒவ்வொரு முறையும் 150 இதழ்களுடன் மலரும் ஜெரிக்கோ நகரத்து றோஜா மலருடன் ஒப்பிடுவார் இப்படியானதொரு கூற்றில் மரியாளின் திருப்புகழ்மாலைதான் சுட்டிக்காட்டப்படுகின்றது என்பதை ஏற்றுக் கொள்ள மறுப்பது அனேகமாக முடியாத காரியம். இந்தப் புனிதர் இவரது மாணவனும் இவருடன் திரு அவை வல்லுனராகவும் உள்ள புனித தோமஸ் அக்குவினாஸ் (1225-1272) உடன் 'அருள்மிகப்பெற்ற மரியே வாழ்க' எனும் செபத்தை அடிப்படையாகக் கொண்டு பல மறையுரைகளை ஆற்றியுள்ளார். செபத்துடன் திருஅவையின் மறைவல்லுனராகிய புனித பொனவெஞ்சர் (1221-1274) போன்ற 13ம் நூற்றாண்டின் பிரான்சிஸ்கன் சபையினர் இவ்வாறே செயற்பட்டு வந்துள்ளனர்.

சாமிநாதரின் சபையின் ஐந்தாவது முதல்வர் தந்தையாகிய ஹம்பர்ட் டி றொ-மானிஸ் அடிகளும் செபமாலயின் ஒரு சாட்சியமாக விளங்கினார் என சாமிநாதர் சபைப் பாரம்பரியம் கூறுகின்றது. புனித சாமிநாதர் இறந்து 40 வருடங்களின் பின் இறந்த டி றொமானிஸ் சாமிநாதர் சபை நவசந்நியாசிகளிடம் வாய்மொழிச் செபத்திலும் பார்க்க தியானச்செபம் மேலானது என்று வலியுறுத்திக் கூறுவார். நவசந்நியாசிகளுக்கு வகுப்பெடுக்கும் போது அதில் ஒரு பகுதியாக அவர்கள் கிறிஸ்துவின் மனிதாவதாரம், பிறப்பு, பாடுகள் எனும் மறைபொருட்களுடன் அவர்கள் 'பரலோக மந்திரம்', 'அருள் மிகப்பெற்றமரியே வாழ்க' எனும் செபங்களைச் சொல்லும் போது தியான விடயங்களாக இருக்கவேண்டுமென ஊக்கப்படுத்துவார். தியானத்துடன் இவ்வகைச்செபம் இணைக்கப்படாவிடின் அது செபமாலையைவிட வேறு எதுவாக இருக்கமுடியும்? இந்த எடுத்துக்காட்டுகள் சாமிநாதர் சபையின் இதயமாக எப்போதும் செபமாலை இருந்து வந்துள்ளமையை உறுதிப்படுத்துகின்றது. வரலாறு பூராகவும் பல சந்தர்ப்பங்களில் சாமிநாதர் சபையானது 'செபமாலையின் சபை' என்று குறிப்பிடப்படுகின்றது.

புனித சாமிநாதர் இறப்பினைத் தொடர்ந்து செபமாலையில் இடம்பெற்ற பல வளர்ச்சிமாற்றங்களுக்கு புனித சாமிநாதரின் ஆன்மீகப்புதல்வர்களின் செல்வாக்குத் தான் காரணம் என்று சொல்லப்படுகின்றது. ஆரம்ப காலச்சாமிநாதர் சபையினர் செபமாலை சொல்லிச் செபித்தபோது 'திருப்புகழ்மாலை' (கட்டளைச்செபம்), பிதாவுக்கும் சுதனுக்கும் செபம், கிருபை தயாபரத்துக்கு பாதுகாவலாயிருக்கிற எங்கள் இராக்கினியே வாழ்க!... எனும் செபங்களைச் செபமாலையை அப்படியே பின்பற்றிச் செபித்தார் எனத் திருஅவை வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். திருப்புகழ்மாலைச் செபத்தின் போது ஒவ்வொரு சங்கீதத்தின் முடிவிலும் பிதாவுக்கும், சுதனுக்கும் செபம் சேர்க்கப்பட்டது போலவே மரியாளின் திருப்புகழ் மாலையிலும் ஒவ்வொரு காரணிக்கத்தின் முடிவிலும் 'பிதாவுக்கும் சுதனுக்கும்' செபத்தைச் சேர்த்துச் சொல்லிச் செபிப்பது பொருத்தமாயிருக்கும் என அவர்கள் கருதினார்கள். திருஅவை வரலாற்றைப்பார்க்கும் போது 'பிதாவுக்கும் சுதனுக்கும்' எனும் செபம் 6ம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து திருவழிபாட்டில் பாவனையில் இருந்துவந்துள்ளது. தென்கிழக்கு பிரான்சில் வைசோன் (Vaison) எனுமிடத்தில் திரு வழிபாடு சம்பந்தமான ஒழுங்குமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த 529ம் ஆண்டு இடம் பெற்றதொரு சங்கத்தில் 'பிதாவுக்கும் சுதனுக்கும்' எனும் செபம் பொதுச் பாவனைக்கு அங்கீகரிக்கப்பட்டது.

கிருபைதயாபரத்துக்கு மாதாவாயிருக்கிற எங்கள் இராக்கினியே எனும் 12ம் நூற்றாண்டில் ஆரம்பமான செபம் பாரம்பரியமாக கிளேர்வோ நகரத்து புனித பேர்ணாட்டினால் ஆக்கப்பட்டு சிஸ்டர்சியன் துறவிகளால் இரவுச்செப முடிவில் செபிக்கப்பட்டு வந்தது. 13ம் நூற்றாண்டில் சாமிநாதர் சபை நிறுவப்பட்டபோது அவர்களும் சிஸ்டர்சியன் சபையின் மேற்படி நடை முறையைப்பின்பற்றி இரவுச் செபத்தை 'கிருபைதயாபரத்துக்கு மாதாவாயிருக்கிற எங்கள் இராக்கினியே' என்னும் செபத்தைச் சொல்லி நிறைவு செய்தனர். பின்னர் செபமாலையின் காவலர்களாகவும் நடைமுறையிலிருந்த ஏற்றுக் கொள்ளப்பட்ட திருவழிபாட்டு ஒழுங்கு முறைகளுக்கு ஏற்பவும் சாமிநாதர் சபையினர் மரியாளின் திருப்புகழ் மாலையின் முடிவில் 'கிருபை தயாபரத்துக்கு மாதாவாயிருக்கிற எங்கள் இராக்கினியே' செபத்தைச் சொல்லத் தொடங்கினர். இம்முறை விரைவில் எல்லா இடங்களுக்கும் பரவ இதுவே வழமையான செபமாலையை நிறைவு செய்யும் முறையாக மாறியது.

13ம் நூற்றாண்டில் சாமிநாதர் சபையினர் மத்தியில் மரியாளின் திருப்புகழ்மாலை பிரபல்யமாகியிருந்தமைக்கான வேறு எடுத்துக் காட்டுக்களும் உள்ளன. 1243ம் ஆண்டு சாமிநாதர் சபையின் வரலாற்றுப்பதிவாளர் அருட்சகோதர் ஜோன் டி மைலி (Bro. John de Mailly) புனிதர்களின் வாழ்க்கைத்தொகுப்பு ஒன்றை வெளியிட்டார். அதில் தமது நாட்களில் பல பக்தியுள்ள பெண்கள் வானதூதரின் வாழ்த்துரையை 150 தடவை சொல்லிச்செபிக்கும் வழமையொன்றிருந்தது என்று குறிப்பிட்டுள்ளார். இந்தப்பக்தி முயற்சிதான் கன்னி மரியாளின் திருப்புகழ்மாலையென்று மிகத்தெளிவாக எழுதுகின்றார் திரிதெந்தீன் நகரைச் சேர்ந்த பார்த்தலோமேயு எனும் சாமிநாதர் சபையின் வரலாற்றாசிரியர். இதே நடைமுறையைப்பற்றி எழுதும் போது அருட்சகோதரி யூலாலியாவின் வாழ்க்கை வரலாறு பற்றிக்குறிப்பிடுகிறார். இந்த அருட்சகோதரி பரிசுத்த கன்னி மரியாள் மட்டில் அளவற்ற பற்றுதல் கொண்டவராகக் கன்னி மரியாளின் புகழ்ச்சிக்காக ஒவ்வொரு நாளும் 150 முறை வானதூதரின் வாழ்த்துரைகளைச்சொல்லிச் செபித்து வந்தார். திருதெந்தீன் நகரப் பார்த்தலோமேயு மேலும் கன்னி மரியாள் ஒரு முறை அருட்சகோதரி யூலாலியாவிற்குக் காட்சியில் தோன்றி அவளது இச்செயற்பாடு எவ்வளவுக்குத் தமக்கு மகிழ்ச்சி கொடுத்தது என்றும் குறிப்பாக 'ஆண்டவர் உம்முடனே' எனும் வார்த்தைகள் மெதுவாகவும், பக்தியுடனும் உச்சரிக்கப்படும்போது தமது மகிழ்ச்சி அளவு கடந்ததாக இருக்கிறது என்றும் குறிப்பிடுகிறார்.

பார்த்தோலோமேயு மேலும் குறிப்பு வகையில் அன்னை மரியாள் அருட்சகோதரி யூலாலியாவுக்கு ஒருமுறை காட்சியில் தோன்றிய போது இந்த நடைமுறை தமக்கு மிகவும் பிடித்திருந்தது என்றும் குறிப்பாக "ஆண்டவர் உம் முடனே" என்ற வார்த்தைகள் மெதுவாகவும் பக்தியுடனும் உச்சரித்துச் சொல்லப்படும் போது தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும், மரியாள் அருட்சகோதரி யூலாலியா 'அருள் மிகப் பெற்ற மரியே வாழ்க' செபத்தைச் சொல்லிச்செபிக்கும் போது அவ்வார்த்தைகளைத் தியானித்துச் செபிக்க வேண்டுமென்றும் அவசரப்பட்டு மிக வேகமாகச் சொல்லி முடிக்காது மெதுவாகச் சொல்லி முடிக்கவேண்டுமென்றும் எதிர்பார்த்தார். (தொடரும்....)

## மாதகல் புனித லூர்து அன்னை திருத்தல திருவிழா - 2024

மாதகல் துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள புனித லூர்து அன்னை திருத்தல திருவிழா 17.02.2024 ஆம் திகதி சனிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

08.02.2024 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4.45 மணிக்குத் திருச்செபமாலையுடன் கொடியேற்றத் திருப்பலி ஆரம்பமாகும்.

தினமும் மாலை 4.45 மணிக்கு திருச் செபமாலையுடன் நவநாள் வழிபாடுகள் ஆரம்பமாகும். 16.02.24ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு புனித லூர்து அன்னையின் திருச்சொரூப தேர்ப்பவனியும் நற்கருணை வழிபாடும் நற்கருணைப் பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

17.02.2024ம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திருநாள் திருப்பலி நடைபெறும். புனித லூர்து அன்னை வழியாக ஆண்டவன் அருளைப் பெற்று இறையுறவில் வளமுடன் வாழ பக்தர்களை அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

## துயர் பகிர்கின்றோம்

யாழ். மறைமாவட்டக் குருவும் பலாலி முன்னாள் பங்குத் தந்தையுமான அருட்பணி எரோனியஸ் அடிகளாரின் அன்புத் தாயார் **திருமதி கென்றி மரிய கார்மலா** அவர்கள் கடந்த 21.01.2023 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன் கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

## நினைவழியா நினைவுகள்

30ம் வருட நினைவு — 33ம் வருட நினைவு

மலர்வு 01-06-1910 — உதிர்வு 30-09-1989



மலர்வு 13-10-1920 — உதிர்வு 31-01-1991

அமரர்கள் **திரு. திருமதி. ஞானப்பிரகாசம் பார்பரம்மா**

"வேற்றிடங்களில் வாழும் ஆயிரம் நாட்களிலும் உமது கோவில் முற்றங்களில் தங்கும் ஒருநாள் மேலானது" (தி.பா 84 :10)

**ஆண்டவன் அடிசேர்ந்து**
**ஆண்டுகள் பல ஆனதே**
**எங்கள் குடும்ப விளக்குகளே**
**நீங்கள் உருவாக்கிய ஏழு மழலைகள்**
**வசந்தம் வீசும் காட்சியைக் காண**
**நீங்கள் இல்லையே**
**உங்கள் ஆன்மா சாந்தியடைய**
**இறையருள் வேண்டுகிறோம்**

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக (31.01.2024)அன்று மாலை 5.00 மணிக்கு ஆனையூர் புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

"நிலாமுற்றம்"
உயரப்புலம், ஆனைக்கோட்டை

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், பேரர், பேர்த்திகள், பூட்டப் பிள்ளைகள்

AD-06

## விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவு

மலர்வு 30 . 10 . 1946 — உதிர்வு 16 . 02 . 2023



அமரர்

### திருமதி சில்வெஸ்டர் குளோட்டில்டா (ராணி)

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம்
கொள்பவன் இறப்பினும் வாழ்வான்
(யோவான் 11:25)

நிறை வாழ்வை இவ்வுலகில் வாக்களித்த இறைவா உமது இல்லத்திலும் உமது அடியாள் இன்புற்றிருக்கச் செபிக்கிறோம். இவரது ஆன்ம இளைப்பாற்றிற்காக 16.02.2024 வெள்ளிக்கிழமை காலை 6.15 மணிக்கு ஆனையூர் புனித அடைக்கலநாயகி ஆலயத்திலும், 5.30 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலும் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

நிலாமுற்றம், உயரப்புலம்,
ஆனைக்கோட்டை

இவரின் பிரிவால் துயருறும்
கணவன். மகள், மருமகன், சகோதர சகோதரிகள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள், மைத்துனர்

AD-07

## 4ம் வருட நினைவஞ்சலி

மண்ணில் 24 . 08 . 1959 — விண்ணில் 22 . 02 . 2020



அமரர்

### ஷிவோன் நாளினி ரவீந்திரன்

ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும். ஆண்டவரின் அழகை நான் காண வேண்டும் அவரது கோவிலில் திருவுளத்தைக் கண்டறிய வேண்டும்

07, அச்சக வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

AD-09

## 13ஆவது ஆண்டு நினைவலைகள்

மழலையாய் 25 . 05 . 1929 — மகிமையாய் 23 . 01 . 2011



அமரர்

### ஞானப்பிரகாசம் பிரான்சிஸ்

**(துரைமாமா)**

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் அன்பு மாமாவே! நீர் எம் கண்களில் இருந்து மறைந்து ஆண்டுகள் 13 ஆன போதும் நீர் எம்மோடு வாழ்ந்த ஆனந்தமான நாட்களும், உம் நினைவுகளும் எம்மை விட்டு என்றும் அகலாது.

உம் ஆன்மா இறை சன்னிதியில் இளைப்பாற்றியடைய இறைவனிடம் வேண்டுகின்றோம்.

சூசையப்பர் கோவில் பின் வீதி
அளவெட்டி

உங்கள் பிரிவை மறக்காத
மருமக்கள்

AD-05

## விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவு

மலர்வு 08 . 02 . 1937 — உதிர்வு 07 . 01 . 2024



அமரர்

### திருமதி சின்னத்துரை இராசம்மா

ஆண்டவரே என் ஆயன் எனக்கேதும் குறை இல்லை
பசும் புல் வெளி மீது எனை இளைப்பாறச் செய்வார்.
(தி.பா 23.1.2)

நிறைவாழ்வை இவ்வுலகில் வாக்களித்த இறைவா உமது இல்லத்திலும் உமது அடியாள் இன்புற்றிருக்கச் செபிக்கிறோம். இவரது ஆன்ம இளைப்பாற்றிற்காக 06.02.2024 செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

மல்வம், உடுவில்

தகவல்
மகள் மாலதி

AD-08

## விண்ணக வாழ்வில் 4ம் வருட நினைவஞ்சலி

மலர்வு 14 . 02 . 1947 — உதிர்வு 03 . 02 . 2020



### அமரர் சவரிமுத்து ஆரோக்கியநாதர்

**(நிரந்தர மறையாசிரியர்)**

" நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்; என் ஓட்டத்தை முடித்து விட்டேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" (2 திமோ 4:7)

இல. 76, மருதங்கேணி வீதி
புலோலி தெற்கு, புலோலி.

அன்புடன் நினைவு கூரும்
குடும்பத்தினர்

AD-04

# யாழ். பேராலயத்தில் கிறிஸ்தவ ஒன்றிப்புவார வழிபாடு



யாழ். கிறிஸ்தவ ஒன்றியமும், கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான யாழ். மறைமாவட்ட ஆணைக்குழுவும் இணைந்து முன்னெடுத்த ஒன்றிப்புவார இறுதிநாள் நிகழ்வு கடந்த 25ஆம் திகதி யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றது.

ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை T. செல்வரட்ணம் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அங்கிலிக்கன் திரு அவையின் யாழ். குருமுதல்வர், திரு வருட்பணியாளர் செல்வன் அவர்கள் கலந்து அருளுரை வழங்க, யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் இறுதி ஆசீரை வழங்கினார்.

இந்நிகழ்வில் தென்னிந்தியத் திரு அவை ஆயர் பேரருட்தந்தை வேலுப்பிள்ளை பத்ம தயாளன் அவர்களும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், குருமட மாணவர்கள், கிறிஸ்தவ சபைகளைச் சேர்ந்த இறைமக்களென 170ற்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர்.

# மணற்காட்டில் திருப்பாலரின் பட்டத்திருவிழா



மணற்காட்டுப் பங்கில் திருப் பாலர் சபைப் பிள்ளைகளுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு பங்குத்தந்தை அருட் தந்தை யோன் குருஸ் அடி களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 27ஆம் திகதி புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டத் திருப்பாலர் சபை இயக்குநர் அருட்தந்தை எயின்சிலி றொஷான் அடிகள் கலந்து திருப்பலி ஒப்புக்கொடுத்து 90 சிறார்களுக்குச் சின்னம் சூட்டிவைத்தார். இந்நாளைச் சிறப்பிக்குமுகமாகக் கலை நிகழ்வுகளும் பட்டத்திருவிழாவும் இடம்பெற்றன. கலை நிகழ்வுகளிலும் பட்டத்திருவிழாவிலும் பருத்தித்துறை மற்றும் மணற்காட்டுப் பங்குச் சிறார்கள் இணைந்து 100ற்கும் மேற்பட்ட பட்டங்களை மணற் காட்டுக் கடற்கரையில் ஏற்றினார்கள். யாழ். மறைமாவட்டத்தில் முதல் தடவையாக முன்னெடுக்கப்பட்ட பட்டத்திருவிழா இதுவென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# கச்சதீவுத் திருவிழாவிற்கான முன்னாயத்தம்



கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா இம் மாதம் 24ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் அதற்கான ஆயத்தப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் ஒரு கட்டமாகத் திருவிழாவிற்கான முன்னாயத்தக் கூட்டம் கடந்த 23ஆம் திகதி யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சிவபாலசுந்தரம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில், இவ்வருடம் இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து 8000 பக்தர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்களெனத் தெரிவிக்கப்பட்டதுடன் இவர்களுக்கான பாது காப்பு, சுகாதாரம், போக்குவரத்து மற்றும் உணவு போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

இக்கூட்டத்தில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ. ஜெபரட்ணம் அடிகள், நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருட்தந்தை பத்திநாதன் அடிகள், நெடுந்தீவுப் பிரதேச செயலர் திரு. சத்தியசோதி, யாழ் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், கடற்படைப் பிராந்தியப் பொறுப்பதிகாரி, பொலிஸ் உயர் அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் துறை சார் திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.






# ஊறணிப் பங்கிற்குப் புதிய பங்குத்தந்தை



ஊறணிப் பங்கின் புதிய பங்குத்தந்தையாக அருட்தந்தை சுதர்சன் அடிகள் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் நியமனம் பெற்றுத் தனது பணிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வு கடந்த 14ஆம் திகதி ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்தில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளின் தலைமையில் நடைபெற்றது.

# மண்டைதீவில் திருப்பாலத்துவ சபையினருக்கான சின்னம் வழங்கல்



மண்டைதீவுப் பங்கிலுள்ள 120 திருப்பாலத்துவ சபைச் சிறார்களுக்கு நிரந்தர அங்கத் துவம் வழங்கப்பட்டுச் சின்னம் சூட்டும் விழா கடந்த தை 28ம் திகதி புனித பேதுருவானவர் ஆலயத்தில் இடம்பெற்றது.

திருப்பாலத்துவ சபைத் தினமாகிய அன்று இப்பங்கின் சிறார்களுக்கு விசேட நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. திருப்பாலத்துவ சபையின் யாழ். மறை மாவட்ட இயக்குநர் அருட்பணி எஸ்.ஏ.றொஷான் அடிகளார் திருப்பலியை ஒப்புக்கொடுத்து சிறார்களுக்கான சின்னங்களைச் சூட்டி வைத்தார்.

இந்நிகழ்வை ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி T.யேசுதாசன் சந்திரன் அடிகளார் சிறப்பாக ஒழுங்குசெய்திருந்தார். இந்நிகழ்வுகளில் அருட்சகோதரிகளும் ஊக்குவிப்பாளர் களும், திருப்பாலர்களும் பங்குபற்றிக் கொண்டாடி மகிழந்தனர்

# கிளாறட் சிறுவர் கதம்பத்தினால் மாணவர் திறன் வினை விழா



கிளரேசியன் துறவற சபையின் கிளாறட் சிறுவர் கதம்பத்தினால் முன்னெடுக்கப்பட்ட மாணவர் திறன் வினை விழா கடந்த 27ஆம் திகதி யாழ். மறைக்கல்வி நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கதம்ப இயக்குநர் அருட்தந்தை அருள்ராஜா அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலை, இலக்கியப் போட்டிகளும் பரிசளிப்பும் இடம்பெற்றன.

மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்தந்தை ஜேம்ஸ் மற்றும் வைத்திய நிபுணர் திரு. சிவதாஸ் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் யாழ். மறைமா வட்டப் பங்குகளைச் சேர்ந்த 170ற்கும் அதிகமான சிறார்கள் பங்குபற்றியிருந்தனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2024ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.